ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகக் கைபேடு

## ஐந்தாம் வகுப்பு

(முப்பருவப் பாடநூல் தொகுப்பு)

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

சென்னை மதுரை கோவை

## தமிழின் இனிமை! (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. கரும்பு 2. கனி + இடை 3. பனிமலர்

**ஆ) பிரித்து எழுதுக.** 1. கழை + இடை 2. என் + உயிர்

**இ) கீழ்க்கண்ட சொற்களைப் பொருத்தி மகிழ்க.** 1. பசு 2. கரும்பு 3. தென்னை 4. வெல்லம்

**ஈ) இப்பாடலில் வரும் ஒரே ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுக.**

கனியிடை, கழையிடை, பாகிடை, பாலும், தேனும், நீரும், சுவையும்

**உ) இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் உள்ள சொற்களை எழுதுக.**

கனியிடை- பனிமலர் - நனிபசு, இனியன - எனினும், தென்னை - என்னுயிர் - என்பேன்.

**ஊ) இப்பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

கனிச்சுவை, கழைச்சாறு, பனிமலர், தேன், பாகு, பால், குளிரிளநீர்.

**எ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

பலாச்சுளை, கரும்புச்சாறு, தேன், பாகு, பசுவின்பால், இளநீர் ஆகியவற்றை பாரதிதாசன் இனியன என்று கூறுகிறார்.

2. பாரதிதாசன் எதனை என் உயிர் என்று கூறுகிறார்?

பாரதிதாசன் தமிழே என் உயிர் என்கிறார்.

**ஏ) சிந்தனை வினா**

1. பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார். உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?

பழவகைகள், கற்கண்டு, தேன், வாழை, நுங்கு ஆகியவையெல்லாம் எனக்கு இனிமையானவை. ஏனென்றால் இவை அனைத்தும் இயற்கையில் இன்சுவை கொண்டவை.

**ஐ) பயிற்சி : விடுபட்ட பாடல் வரியை எழுதுக.**

நனிபசு பொழியும் பாலும்
தென்னை நல்கிய குளிரிரு நீரும்.

### கற்பவை கற்றபின்

2. தமிழை உயிர் எனப் பாரதிதாசன் அழைப்பதுபோல் நீங்கள் தமிழை எவ்வாறு அழைப்பீர்கள் ?

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் போன்றது. எனவே அத்தமிழை உயிரினும் மேலாக நேசிக்கிறேன்.

## கவிதைப் பட்டிமன்றம் - அறிவா? பண்பா (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. நன்மை + தமிழ் 2. வானம் 3.அறிவாயுதம் 4.புகழ் 5. வரலாறு 6. வண்ணம் + தமிழ் 7. சொல் + சுவை 8. பண்பிலான்

**ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. செம்மை + தமிழ் 2. கவி +அரங்கம் 3. தமிழ் + அமுது 4. முதுமை + மொழி 5. அறிவு + ஆற்றல்

**இ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அறிவால் உயர்ந்தவர்களாக விசால் யார் யாரைக் குறிப்பிடுகிறார் ?

அறிவால் உயர்ந்தவர்களாக விசால் அப்துல்கலாம், தாமஸ்ஆல்வாஎடிசன், கணிதமேதை இராமானுஜம் சர்.சி.வி. இராமன் ஆகியோரைக் குறிப்பிடுகிறார்.

2. பண்பால் சிறந்தவர்களாக ஆரீஸ் எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?

புத்தரும், திருவள்ளுவரும் பண்பில் சிறந்தவர்களாக ஆரீஸ் குறிப்பிடுகிறார்.

3. **உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார், யாருக்குக் கொடுத்தார் ?**

கடையெழு வள்ளல்களில் ஒருவரான, தகடூரை ஆண்ட சேரமன்னன் அதியமான் உயிர் காக்கும் நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தார்.

4. **நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக.**

கண்ணுக்கு இரு விழிகள் இருப்பது போல் மனிதருக்கு அவசியம் அறிவும், பண்புமே. இவ்விரண்டையும் பெற்றவரே உலகை ஆண்டிடலாம்.

5. **ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நான்கையும் கூறுக.**

கண், காது, வாய், மூக்கு, மெய் (உடல்)

6. **தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.**

வண்ணத்தமிழ், தேன்தமிழ், செகம் போற்றும் செந்தமிழ், முத்தமிழ், நற்றமிழ்.

7. **நீ நடுவராக இருந்திருந்தால் என்ன தீர்ப்பு வழங்கியிருப்பாய்?**

நான் நடுவராக இருந்திருந்தால் அறிவும், பண்பும் சேர்ந்திருந்தால் மட்டுமே உலகத்தைக் கையாள முடியும் என்று கூறியிருப்பேன்.

**ஈ) சிந்தனை வினாக்கள்**

1. **கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் கல்வியே சிறந்தது என நீ கருதுகிறாய்? ஏன்?**

கல்வியே சிறந்தது என நான் கருதுகிறேன். ஏனென்றால் செல்வம் அழிந்து விடும் தன்மை கொண்டது. வீரம் வயதானால் குறைந்து விடும். அழியாமல், குறையாமல், யாராலும் கவரமுடியாமல் இருப்பது கல்வி மட்டுமே! எனவே கல்வியே சிறந்தது.

2. **வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமா? இத்தொடருக்கான பொருளை உம் சொந்த நடையில் வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

வெறும் பண்பை வைத்துக்கொண்டு வாழ்வில் வெற்றிநடை போட முடியாது. அறிவும், ஆற்றலுமே பண்புடன் சேரும் பொழுது பெரும்பயன் தரும்.

## கற்பவை கற்றபின்

1. அறிவு, பண்பு - நீ எவற்றைப் பெற விரும்புகின்றாய்?

அறிவு, பண்பு - இவற்றில் பண்பைப் பெற நான் விரும்புகிறேன்.

2. அறிவு தான் முன்னேற்றத்தின் ஆணிவேர் - இது பற்றிய உனது கருத்து யாது?

அறிவு தான் முன்னேற்றத்தின் ஆணிவேர் என்பது உண்மை. மனிதனின் அறிவு தான் அவனைச் சிந்திக்க வைத்து, இன்று நாகரீக மனிதனாக உருவாக்கியது. ஆதிகால மனிதன் படிப்படியாக அறிவு வளர்ச்சியால் இன்று மாற்றம் கொண்டு உலகம் ஆள்கின்றான்.

3. **நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிப்பவர் அறிவுடையவரா? பண்புடையவரா? வகுப்பறையில் உரையாடுக.**

பண்புடையவர்கள்:

தந்தைபெரியார், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள், புத்தர், திருவள்ளுவர் ஆகியோர் தங்கள் நற்பண்புகளால் சிறந்து, தன்னலம் இல்லாமல் நாட்டுமக்கள் நலனுக்காகவே பாடுபட்டவர்கள். நாடு விடுதலை பெறவும், தீய வழிகளில் மக்களைச் செல்லவிடாமல் நல்வழி காட்டி உழைத்தவர்களால் தான் நம் நாடு வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே நாட்டின் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிப்பவர்கள் பண்புடையவர்களே!

அறிவுடையவர்கள்:

தாமஸ்ஆல்வாஎடிசன், சர்.சி.வி.இராமன், கணிதமேதை இராமானுஜம், டாக்டர்.அப்துல்கலாம் ஆகியோர் வல்லவர்கள். தங்கள் கண்டுபிடிப்பால் உலகமே போற்றும் வண்ணம் நம் நாட்டை அறிவியல் துறையில் உயர்த்தி இருக்கிறார்கள். எனவே, நாட்டின் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிப்பவர்கள் அறிவுடையவர்களே!

## **என்ன சத்தம்?** (விரிவானம்)

**மதிப்பீடு :**

**அ) வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. செல்வமணி ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?**

ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால் செல்வமணி ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டிற்கு ஓட்டிச்சென்றான்.

**2. செல்வமணி செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.**

காட்டில் புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துக் கொண்டிருந்தன. செல்வமணி ஒரு மரத்தடியில் அமர்ந்து இயற்கை அழகை இரசித்துக் கொண்டு இருந்தான். சிறிது நேரத்தில் கண் அயர்ந்து விட்டான். திடீரென ஆடுகள் கத்தத் தொடங்கின. சத்தம் கேட்டு செல்வமணி திடுக்கிட்டு எழுந்தான். புதர் அருகே நரி ஒன்று ஆடுகளைக் கொன்று தின்ன தயாராக இருப்பதைக் கண்டான். தன் வசம் இருந்த கைத்தடியால் நரியை அடித்து விரட்டினான். காயமடைந்த நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடி விட்டது. மாலை நேரம் ஆனது. செல்வமணி ஆடுகளை வீட்டிற்கு ஓட்டிச் சென்றான்.

**ஆ) சிந்தனை வினா**

**1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்ததால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவது போல் ஓர் உரையாடல் எழுதிக் காட்டுக.**

மான் : அதோ சிங்கம் வருது. எல்லாரும் ஓடுங்க ஓடுங்க.

முயல் : மான் அக்கா என்ன சொல்றீங்க?

மான் : அட நான் உண்மையைத் தான் சொல்றேன். ஓடுங்க!

முயல் : சரி மான் அக்கா.

சிங்கம் : எல்லாரும் எங்க ஓடுறீங்க? நில்லுங்க, ஏய்! நில்லுங்க.

மான் : நிக்க மாட்டோம்! நீ எங்களை தின்னுடுவ.

சிங்கம் : அட நில்லுமானே!, உங்களை எதுவும் பண்ணமாட்டேன்.

மான் : அய்யோ! நீ இப்படி எத்தனை முறை சொல்லி எங்க இனத்தையே அழிச்சுட்டே என்று சொல்லியபடியே நிற்காமல் ஓடியது.

**2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஒலியெழுப்புகிறது என எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?**

சிந்தித்தது உண்டு. ஒரு நாள் எங்கள் வீட்டுநாய் நடுஇரவில் மிகவும் குரைத்தது. அப்போது தான் திருடன் வந்ததை அறிந்தோம்.

### **கற்பவை கற்றபின்**

**1. செல்வமணியின் செயல்பாடுகளை பற்றிய கருத்துகளை குழுவாக அமர்ந்து கலந்துரையாடுக.**

செல்வமணியின் தைரியமும், கருணை உள்ளமும் பாராட்டுக்குரியது.

**2. விடுமுறை நாளான ஞாயிறு அன்று நீங்கள் என்ன செய்தீர்கள்? வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.**

விடுமுறை நாளான ஞாயிறு அன்று எங்கள்கிராமத்திற்குச் சென்றோம். அங்கு பட்டம் விட்டு விளையாடினோம்.

**3. நீங்கள் அறிந்த கதையை வகுப்பறையில் கூறுக.**

மாணவர்கள் தாங்களாகவே முன் வந்து நீங்கள் அறிந்த கதையை வகுப்பறையில் கூற வேண்டும்.

**4. வகுப்பில் குழுவாக அமர்ந்து இப்பாடப்பகுதிக்கு ஏற்ற தலைப்பினை தெரிவு செய்திடுக.**

காட்டில் செல்வமணியின் அனுபவங்கள்.

## மரபுச்சொற்கள் ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. மரபு  2. பிளிறும்  3. ஒலி மரபு  4. புலிப்பறழ்  5. வினை மரபு

**ஆ) ஒலிமரபுகளைப் பொருத்துக.**

1. சிங்கம் - முழங்கும்  2. அணில் - கீச்சிடும்  3. மயில் - அகவும்
4. குயில் - கூவும்  5. குரங்கு - அலப்பும்

**இ) உயிரினங்களின் படங்களுக்கு உரிய ஒலிமரபை வட்டமிடுக.**

1. அகவும்  2. பேசும்  3. அலப்பும்  4. கத்தும்  5. கூவும்  6. பிளிறும்

**ஈ) வினை மரபுகளைப் பொருத்துக.**

1. நீர் - குடித்தான்  2. முறுக்கு - தின்றான்  3. உணவு - உண்டான்
4. அம்பு - எய்தான்  5. பூ - பறித்தாள்

**உ) ஒலி மரபுச்சொற்களை எழுதுக.**

1. கத்தும்  2. கீச்சிடும்  3. கூவும்  4. கரையும்  5. குரைக்கும்  6. மொய்க்கும்

**ஊ) வினாக்களுக்கு விடை தருக.**

**1. மரபு என்றால் என்ன?**

பழங்காலந்தொட்டு நம் முன்னோர்களால் இது இப்படித்தான் அறியப்படவேண்டும் என்று எப்பொருளை எச்சொல்லால் வழங்கினார்களோ அப்பொருளை இன்றளவும் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும்.

**2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச்சொற்கள் இடம் பெற்றுள்ளன?**

பாடப்பகுதியில் ஐந்து வகையான மரபுச்சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

குயில் கூவும், காகம் கரையும், யானை பிளிறும், புலி உறுமும்

### கற்பவை கற்றபின்

**1. நீங்கள் அறிந்து கொண்ட மரபுச்சொற்களைக் கூறுக.**

ஒலிமரபு, இளமைப்பெயர் மரபு, வினைமரபு, உறுப்புப்பெயர்மரபு, இருப்பிட மரபுச்சொற்கள் என ஐந்து வகையான மரபுச்சொற்கள் நான் அறிந்து கொண்டவையாகும்.

**2. நாம் ஏன் மரபுச்சொற்களைப் பேசுகிறோம் என்பது பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

ராகுல் :

பழங்காலந்தொட்டு நம் முன்னோர்களால் இது இப்படித்தான் அறியப்படவேண்டும் என்று எப்பொருளை எச்சொல்லால் வழங்கினார்களோ அப்பொருளை இன்றளவும் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும்.

நாய் கத்தியது எனக் கூறுவது வழக்கம். அவ்வாறு கூறுதல் கூடாது. நாய் குரைத்தது என்பதே உரிய மரபுத்தொடர்ச்சொல் ஆகும்.

கவிதா :

ஆம். சரியாக கூறினாய். இம் மரபுச்சொற்களைப் பின்பற்றவில்லையெனில் மொழி சிதைந்து விடும்.

### மொழியை ஆள்வோம்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. பட்டிமன்றம் : எங்கள் பள்ளி ஆண்டுவிழாவில் நகைச்சுவைப் பட்டிமன்றம் நடந்தது.
2. இனிமை : தமிழ்மொழி மிகவும் இனிமையானது.
3. உலகம் : உலகத்தில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் காணப்படுகின்றன.
4. வெற்றி : ராஜா ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக வந்து வெற்றி பெற்றான்.

3. **கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.**

1. அம்மா தும்மினார். 2. கலா படிக்கிறாள் 3. புறா பறந்தது. 4. நாய் தூங்கியது. 5. குழந்தை அழுதது.

4. **எடுத்துக்காட்டில் உள்ளது போல் மாற்றி எழுதுக.**

2. எனக்குப் பிடித்த பாடம் தமிழ். 3. வரும் வெள்ளிக்கிழமையன்று கோவிலுக்கு செல்வோம்.

5. **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ் என்பது உலகில் முதல் மனிதன் பேசிய முதல்மொழி என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.
2. இன்று உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.
3. தமிழ்மொழி இலக்கண இலக்கியவளங்களைத் தன்னகத்தோடு பெற்றுள்ளது.
4. தமிழ்மொழி வளமான சொற்களை உடையது. 5. ஆறாயிரம் - ஆறு + ஆயிரம்

6. **பொருத்தமான சொற்ளால் பாடலை நிறைவு செய்க.**

1. பொறுமை உடையவன் மாணவன். 2. கல்வி கற்பவன் மாணவன்.
3. பயிற்சி பெறுபவன் மாணவன். 4. உண்மை பேசுபவன் மாணவன்.
5. பொறாமை அற்றவன் மாணவன். 6. கல்லாமை தவிர்ப்பவன் மாணவன்.
7. முயற்சி செய்பவன் மாணவன். 8. ஊக்கம் கொள்பவன் மாணவன்.

## மொழியோடு விளையாடு

1. **தமிழின் இனிமை பாடலில் வரும் வருணனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

கனிச்சுவை, கழைச்சாறு, பனிமலர், தேன், பாகு, நனிபசு, பால், தென்னை, குளிரிளநீர்.

2. **குறிப்புகளைக் கொண்டு விடைகளைக் கண்டுபிடிக்க.**

1. தந்தை 2. அன்னை 3. பகல் 4. பகிர்ந்து 5. ஆத்திசூடி 6. மலர்

3. **கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.**

1. திருவள்ளுவர் 2. அகத்தியர் 3. பாரதியார் 4. பாரதிதாசன் 5. இயல் 6. ஔவையார்
7. திரவியம் 8. கூடி 9. ஆத்திசூடி 10. மஞ்சு 11. மஞ்சள் 12. வாய்க்கால்
13. அமாவாசை 14.மார்கழி 15 .நிலா

4. **சொல்லிலிருந்து புதிய சொல் உருவாக்குக.**

1. மணிமேகலை - மணி, மேகலை, கலை, மேலை, மலை, மே, மேகமே
2. பள்ளிக்கூடம் - பள்ளி, கூடம், படம்
3. பாடப்புத்தகம் - பாடம், புத்தகம், பாதகம், பாதம், பாகம், தடம், கடம்
4.மாடிவீடு - மாடி, வீடு, மாடு

5. **சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.**

1. நான் பாடம் படித்தேன். 2. தேவி பள்ளிக்கு சென்றாள். 3 .நான் வீட்டிற்கு சென்றேன்.
4. நான் பள்ளிக்கு சென்றேன். 5. தேவி பாடம் படித்தாள்.

இயல் - 2

## மூதுரை ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. என்று + எண்ணி 2. மடைத்தலை 3. வருமளவும் 4. அறிவுடையர் 5. நினைத்தல்

**ஆ) இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் உள்ள சொற்களை எழுதுக.**

அடக்கம் - கடக்கக் - ஓட, உடையார் - மடைத்தலையில், வருமளவும் - இருக்குமாம்.

**இ) "மடைத்தலை" இச்சொல்லில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக.** மடை, தடை, மலை, தலை, மதலை.

**ஈ) பொருத்துக.**

உறுமீன் - பெரியமீன் கருதவும் - நினைக்கவும் அறிவிலர் - அறிவு இல்லாதவர்
மடைத்தலை - நீர் பாயும் வழி அடக்கம் - பணிவு

உ) வினாக்களுக்கு விடை தருக.

1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?

கொக்கு தனக்குரிய மீன்கள் வரும்வரை அசைவின்றிக் காத்திருக்கிறது.

2. யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக்கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்?

சிலர் தமக்குரிய காலம் வரும்வரை அடங்கியிருப்பார்கள். எனவே அவர்களை அறிவில்லாதவர் என எண்ணி விடக்கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்.

ஊ) சிந்தனை வினா.

1. அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என எண்ணி வெல்ல நினைக்கக்கூடாது. ஏன்? கலந்துரையாடுக.

ஜீவா : அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக்கூடாது.

ராதா : ஆம். சரியாக கூறினாய். அடக்கமாக இருப்பவர்கள் தனக்குரிய நேரம் வரும் வரை பொறுமையாக இருப்பர்.

மதன் : தனக்குரிய நேரம் வந்தவுடன் விரைவாகச் செயலை முடித்து வெற்றி பெற்றுவிடுவார்கள். ஆதலால் அடக்கமானவரை அறிவில்லாதவராக எண்ணுதல் கூடாது.

## கல்விச்செல்வமும், பொருட்செல்வமும் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக :

1. இப்பிறப்பு 2. காரணம் + ஆகின்றது 3. செழுமை 4.பொருட்செல்வம் 5. பொருளில்லார்க்கு

ஆ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. பழமொழி 2. நல்வழி

இ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. பணம் + என்றால் 2. தொலை + காட்சி

ஈ) தொடரை முழுமை ஆக்குக. ( பத்தும் பறந்து , வளம், கல்வி )

1. பத்தும் பறந்து 2. கல்வி 3. வளம்

உ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. களர்நிலத்துக்கு ஒப்பாவர் - யார்?

கல்வி கற்காதவரே களர்நிலத்துக்கு ஒப்பாவர்.

2. கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியது எது?

பொருட்செல்வம் கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியதாகும்.

3. கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம் என்பதற்கு மதுமதி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் கூறுக.

கற்காதவன் பயன்படாத நிலம் போன்றவன். கல்வி கற்றவருக்கு மட்டுமே மதிப்பு கிடைக்கும். பொருட்செல்வம் கொடுத்தால் குறையும். திருடரும் திருடுவர். ஆனால் கல்விச்செல்வம் குறையாது. திருடவும் முடியாது. இப்பிறப்புக்கும் மறுபிறப்புக்கும் பயன்தருவது கல்வியே. எனவே கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம் என்று மதுமதி கூறினாள்.

4. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்கு மணிமொழி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.

திருவள்ளுவரும் பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகமில்லை என்கிறார். “கல்வி கற்பதற்கும் பணம்தேவை” “பணம் இல்லாதவன் பிணம்” ஆகியவை பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்கு மணிமொழி கூறிய காரணங்களாகும்.

ஊ) சிந்தனை வினாக்கள்.

1. **கல்விச்செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்று தான் உனக்கு வழங்கப்படும் எனில், நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?**

   நான் கல்விச்செல்வத்தைத் தான் பெறுவேன். ஏனென்றால், கல்வியால் பொருட்செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

2. **"நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி" - இதைப்பற்றி உன் சொந்த நடையில் பேசு.**

   மனிதன் தனது வாழ்க்கை முழுவதும் செய்ய வேண்டிய ஒன்று உண்டு என்றால் அது கல்வி கற்பது தான். இளமை முதல் இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும் ஒருவனால் கல்வியில் முழுமை அடையமுடியாது. எனவே தான் "கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு" என்று ஔவையார் கூறினார்.

   நம்மிடம் இருக்கும் அறியாமையை விலக்கி, அறிவை விரிவாக்குவதால் கல்வி நம்மை மேன்மைப்படுத்துகிறது. கல்வி ஒன்று மட்டுமே ஒருவனை நல்லவனாகவும், வல்லவனாகவும், அறிவுள்ளவனாகவும் ஆக்கும் தன்மை கொண்டது. எனவே "நம்மை மேன்மைப்படுத்துவது கல்வியே" என்று கூறி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

எ) **கூடையிலுள்ள சொற்களுக்கு உரிய எதிர்சொற்களைத் தொட்டியிலிருந்து கண்டறிந்து எழுதுக.**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இம்மை | x | மறுமை | நல்வழி | x | தீயவழி | வருத்தம் | x | மகிழ்ச்சி | நேற்று | x | இன்று |
| புதுமை | x | பழமை | வறுமை | x | செழுமை | நன்மை | x | தீமை | | | |

## கற்பவை கற்றபின்

1. **கல்விச்செல்வமா? பொருட்செல்வமா? இதில் எது சிறந்தது என்று நீ நினைக்கிறாய்? ஏன்?**

   கல்விச்செல்வத்தையே சிறந்தது ஏனென்றால், பொருளால் புகழ் அடைந்தவர் மக்கள் மனதில் இருப்பதில்லை. கல்வியால் புகழ் அடைந்தவர் மட்டுமே மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்பர்.

2. **பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை - இது பற்றி உன் கருத்து என்ன?**

   ஆம். பொருள் இல்லாதவர்களுக்கு இல்லற வாழ்க்கை சிறப்பாக இராது.

3. **யாரால் நம் நாடு முன்னேற்றம் அடையும்? - கல்வியால் சிறந்தவர்களா, பொருளால் சிறந்தவர்களா என்பதை உன் வகுப்பறையில் உரையாடுக.**

   மாணவர்கள் தாங்களாகவே முன் வந்து வகுப்பறையில் கல்வியால் சிறந்தவர்களா, பொருளால் சிறந்தவர்களா என்பதை உரையாட வேண்டும்.

## வறுமையிலும் நேர்மை (விரிவானம்)

### மதிப்பீடு :

அ) **வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **அரசர் எதற்காக சிறுவர்களை அழைத்தார்?**

   அரசருக்கு குழந்தையில்லை. அவருக்குப் பின் அவர் தேசத்தை ஆள்வதற்கு வாரிசு தேவைப்பட்டது. எனவே தன் நாட்டுமக்களின் குழந்தைகளில் இருந்து நேர்மை, திறமை, ஆளுமை பொருந்திய ஒருவனைத் தேர்ந்தெடுத்து இளவரசன் ஆக்க எண்ணினார். அதற்காக தன் நாட்டில் உள்ள சிறுவர்களை அழைத்தார்.

2. **சிறுவனின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?**

   நேர்மையும், தைரியமும் தலைமை தாங்குவதற்கான மிக முக்கியமான தகுதிகளாகும். அத்தகைய சீரிய குணங்களைக் கொண்ட லிங் மட்டுமே என் வாரிசாகத் தகுதியுடையவன்; அவனே இந்நாட்டின் இளவரசனாவான் என்று அரசர் அறிவித்தார். இது சிறுவனின் நேர்மைக்குக் கிடைத்த பரிசாகும்.

3. **சிறுவர்கள் "லிங்கை" ஏன் கேலி செய்தனர்?**

   போட்டியில் கலந்து கொண்ட சிறுவர்கள் எல்லோரது தொட்டியிலும் செடி வளர்ந்திருந்தது. ஆனால் லிங் கொண்டு வந்தத் தொட்டி மட்டும் வெற்றுத்தொட்டியாக இருந்தது. வெற்றுத்தொட்டியைப் பார்த்த சிறுவர்கள் லிங்கை கேலி செய்தனர்.

**ஆ) சிந்தனை வினா.**

1. **"லிங்கின்" இடத்தில் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?**

லிங்கின் இடத்தில் நானாக இருந்தால் நானும் அவனைப் போல் நேர்மையாகயிருந்து போட்டியில் வென்று இளவரசுப் பட்டம் பெற்றிருப்பேன்.

## கற்பவை கற்றபின்

1. **நாம் என்னென்ன நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்? பட்டியலிடுக.**

அன்பு, பண்பு, இரக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, மனிதநேயம், புறங்கூறாமை, உண்மை பேசுதல், இன்னாசெய்யாமை, களவாமை, சினம்கொள்ளாமை, தன்னம்பிக்கை, தன்முனைப்பு, விட்டுக்கொடுத்தல், போன்ற நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும்.

2. **உனக்குத் தெரிந்த நேர்மையானவர்களைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.**

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக கருதப்படுபவர் பெருந்தலைவர் காமராசர். தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சி செய்த இவருடைய காலம் தமிழக அரசியல் வரலாற்றில் பொற்காலமாக கருதப்படுகிறது.

காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் 6000 துவக்கப்பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. அவற்றை உடனடியாக செயல்பட ஆணையிட்டார். இலவசக்கட்டாயக்கல்விக்கான சட்டத்தை இயற்றி தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். ஏழை மாணவர்கள் பசியின்றி படிக்க மதியஉணவுத்திட்டத்தைக் கொண்டு வந்தார். ஏற்றத்தாழ்வின்றி குழந்தைகள் பள்ளிகளில் கல்விகற்க சீருடைத்திட்டத்தை அறிமுகம் செய்தார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசர் ஆவார்.

## பெயர்ச்சொல், வினைச்சொல் ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**அ) கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல் என வகைப்படுத்துக.**

பெயர்ச்சொற்கள் : கம்பன், வருணன், அந்தோணி, ஜெரல்டா, சிங்கம்

வினைச்சொற்கள் : படித்தான், வரைந்தாள், உண்டாள், விளையாடினான், வீசியது.

**ஆ) பின்வரும் தொடர்களிலுள்ள பெயர்ச்சொல், வினைச்சொல்லை எடுத்து எழுதுக.**

பெயர்ச்சொற்கள் : ரம்யா, ஆசிரியர், அமலா, கொக்கு, குரங்கு.

வினைச்சொற்கள் : ஓடினாள், நடத்தினார், ஆடினாள், பிடித்தது, ஏறியது.

**இ) கதையில் உள்ள பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் பட்டியலிடுக.**

பெயர்ச்சொற்கள் : புலி, மான், வேடன், நான், என்னை, உனக்கு, எனக்கு, காட்டில்.

வினைச்சொற்கள் : துரத்தியது, ஓடியது, கொண்டது, முயன்றான், பார்த்து, கெஞ்சியது, கூறினான், கேட்டது, துரத்தினாய், கேட்டான், இருந்தது

## கற்பவை கற்றபின்

1. **ஒரு சொல்லைப் படித்தவுடன் அது பெயர்ச்சொல்லா, வினைச்சொல்லா எனப் பகுத்து அடையாளம் காண்க.**

ஒரு சொல்லைப் படித்தவுடன் அது பெயரா, செயல் நிகழ்வா என்பதை உறுதி செய்ய வேண்டும். பிறகு ஒரு பெயராக இருந்தால் பெயர்ச்சொல் என்றும், செயல் நிகழ்வாக இருந்தால் வினைச்சொல் என்றும் அடையாளம் காணலாம்.

## மொழியை ஆள்வோம்

2. **சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. குழந்தைகள் - எங்கள் பள்ளி விளையாட்டுமைதானத்தில் குழந்தைகள் பந்து விளையாடினார்கள்.
2. வேட்டை - புலி மானை வேட்டையாடி சாப்பிடும்.
3. கணினி - கணினி இன்றைய உலகில் பெருமளவில் பயன்பாட்டில் உள்ளது.
4. பாடுபட்டு - பாடுபட்டுத் தேடிய நம் நாட்டின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும்.
5. தமிழ்நாடு - விவசாயத்தில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

3. கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்தித் தொடர்களாக மாற்றுக.

1. விவசாயமே நாட்டின் முதுகெலும்பு.
2. மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
3. உழைப்பே உயர்வு தரும்.
4. காடு செழித்தால் நாடு செழிக்கும்.
5. இல்லாரை எல்லோரும் எள்ளுவர்.

4. கொடுக்கப்பட்டுள்ள விடுகதைக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மழை 2. ஊசி 3. விக்கல் 4. முதுகு 5. அஞ்சல் பெட்டி

## தமிழோடு விளையாடு

3. சொல்லின் இறுதி எழுத்து முதல் எழுத்தாகக் கொண்டு மற்றொரு சொல்லை எழுதி வட்டத்தை நிறைவு செய்க.

குரங்கு - குருவி - வித்து - துளசி - சிறகு - கும்மி - மிளகு

4. படத்தைப் பார்த்து வருணனைச் சொல்லுடன் எழுதுக.

1. முயலைப் பிடிக்க காத்திருக்கும் நரி.
2. ஓடும் நீரை உறிஞ்சிக்குடிக்கும் மான்.
3. மீனுக்காக ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்கு.
4. பழத்தை புசிக்கும் குரங்கு.
5. பச்சை வண்ணப் புல்தரை.
6. உணவைத் தேடும் சிங்கம்.

இயல் - 3

## கடல் (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. மீன் 2. குதிரை 3. குதிரைகள் 4. கடல் 5. கடல்

ஆ) இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

எல்லை - கல்லும், பொங்கு - எங்கும், மலையை - விலைகொள், கடலே - கடலே, திரைகளோ - நிரைதாமோ?

இ) முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

அல்லும் - அலுப்பும், மலையை - மகர, விலைகொள் - விளையாடற், மழைக்கு - மதித்து, கடலே - கடலே

ஈ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. **கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?**

மீன்கள், முத்துகள், சிப்பிகள் ஆகியவை கடல் நமக்கு அளிக்கும் வளங்களாகும்.

2. **பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.**

பெருங்கடலே! நீ இரவு பகல் உறங்காது அலைவீசி, ஓய்வில்லாமல் இருக்கின்றாய்.
அலைகள் குதிரைகள் அணிவகுத்து வருவது போல் உள்ளது.
அலையோசையா? இடியோசையா? என ஐயம் எழுகின்றது.

அலைகள், மீன்கள், சிப்பிகள், முத்துகள் ஆகியவற்றைக் கொண்டது கடல்.
பூமியில் மழை பெய்யவும், மழைநீரைத் தேக்கும் கலமாகவும் கடல் விளங்குகின்றது.
ஆகவே, உன் பெருமைகளைச் சொல்ல வல்லவர்கள் யாருமில்லை.

**3. கடலைப்பற்றி நீ அறிந்த ஐந்து தொடர்களை எழுதுக.**

மீன்கள், முத்துகள், சிப்பிகள் ஆகியவை கடல் நமக்கு அளிக்கும் வளங்களாகும்.
கடல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். கடலில் அலை வீசிக்கொண்டே இருக்கும்.
கடல் இல்லையென்றால் மழைப்பொழிவு நடைபெறாது.
மழையாக பெய்யும் நீரான இறுதியில் கடலையேச் சென்றடையும்.

**சிந்தனை வினா.**

**1. எல்லையறியாப் பெருங்கடல் என்று கூறக் காரணமென்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.**

கடல் எல்லையற்றது. அதற்கு இதுதான் முடிவு என்று கூற முடியாது. அது விரிந்து பரந்துள்ளது. எனவே எல்லையறியாப் பெருங்கடல் என்று கவிஞர் கூறியிருக்கின்றார்.

## கற்பவை கற்றபின்

**1. இப்பாடல் மூலம் கடலைப் பற்றி நீ அறிந்த செய்திகளை உன் சொந்த நடையில் கூறுக.**

கடல் எல்லையறியாப் பெருங்கடல் என்று அழைக்கப்படும்.
கடலில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. கடலில் கப்பல்கள் செல்லும்.
கடலில் அலை வீசிக்கொண்டே இருக்கும். மழையாக பெய்யும் நீரானது இறுதியில் கடலை வந்தடையும்.

## படம் இங்கே! பழமொழி எங்கே? ( உரைநடை உலகம் )

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. மரம் + பொந்து 2. அ + கரை 3.சூறைக்காற்று 4.கண்ணிமைக்கும்

**ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

அ) மணி + ஓசை ஆ) தேன் + இசை இ) ஆடி + காற்று

**இ) பொருத்தமான சொல்லைக் கொண்டு பழமொழியை நிறைவு செய்க.**

1. அடி 2. பயிர் 3. வளையாதது 4. புத்தி 5. காலை

**ஈ) சொல்லை இடம் மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க.**

1. அகல உழுவதை விட ஆழ உழு. 2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
3. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு. 4. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
5. இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.

**உ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பழமொழி என்பது யாது?

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய வார்த்தைகள் பழமொழி ஆகும்.

2. விடுகதை என்றால் என்ன?

ஓர் இரு வரிகளில் ஒரு பொருளை மறைபொருளாக ( நேரடியாக விவரிக்காமல் ) விவரித்து கொடுக்கப்படும் ஒரு புதிரே விடுகதை ஆகும்.

3. கிளியைப் பழமொழிக்கிளி என அழைக்கக் காரணம் என்ன?

மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப்பொந்திலிருந்து எடுத்துக்காட்டும். அந்தப் படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறி விட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால் அதைப் பழமொழிக்கிளி என்று அழைக்கின்றனர்.

4. **இப்பாடத்தில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடுக.**

யானை வரும் பின்னே! மணியோசை வரும் முன்னே! இக்கரைக்கு அக்கரை பச்சை.

ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்.

ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல். ஒற்றுமையே பலம்.

**சிந்தனை வினா**

1. **கிளியைப் போல், நீ பழமொழி கூறுவதாய் இருந்தால் என்ன பழமொழிக்கு எப்படிப் படம் வரைந்து விளக்குவாய்? வகுப்பறையில் செயல்படுத்து.**

இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற பழமொழிக்கு ஏற்ற படத்தை நான் வரைந்து காட்டுவேன். ஐந்தாம் வகுப்பு செந்தமிழ் வாசகம் முதல் பருவப் பாடப்புத்தகத்தில் 54ம் பக்கம் படம் உள்ளது. (உள்ளது உள்ளபடியே)

## கற்பவை கற்றபின்

1. **வகுப்பறையில் உன் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி பேசும் போது பயன்படுத்தும் பழமொழிகளைத் தொகுத்து வந்து மாணவர்களுடன் கலந்துரையாடுக.**

சிறுதுளி பெரு வெள்ளம், தனிமரம் தோப்பாகாது, ஒற்றுமையே உயர்வு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இருப்பதை விட்டுவிட்டு பறப்பதற்கு ஆசைப்படாதே, தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும், விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை ஆகிய பழமொழிகள் என் தாத்தா, பாட்டி பேசும் போது பயன்படுத்தும் பழமொழிகளாகும்.

2. **பாடப்பகுதியில் உள்ள பழமொழிகளையும், அவற்றின் பொருள்களையும் உம் சொந்த நடையில் கூறுக.**

1. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
   பொருள்: முன்னெச்சரிக்கை அறிந்து செயல்படுதல்.
2. இக்கரைக்கு அக்கரை பச்சை.
   பொருள்: அதுவே பரவாயில்லை.
3. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
   பொருள்: ஆடி மாதக் காற்றில் அம்மி கூடப் பறந்து விடும்.
4. ஆலும், வேலும் பல்லுக்குறுதி நாளும் இரண்டும் சொல்லுக்குறுதி.
   பொருள்: திருக்குறளும், நாலடியாரும் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.
5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
   பொருள்: வாய்ப்புகளைக் கிடைக்கும்போதே பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.
6. அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்.
   பொருள்: எந்தச் செயலையும் ஆழ்ந்து செய்ய வேண்டும்.
7. ஒற்றுமையே பலம்.
   பொருள்: அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

3. **பள்ளி நூலகத்திலுள்ள பழமொழிக்கதைகள் புத்தகத்தைப் படித்து பழமொழிக்கான விளக்கத்தை வகுப்பறையில் கதையுடன் பகிர்ந்து கொள்க.**

மாணவர்கள் தாங்களாவே முன் வந்து வகுப்பறையில் பழமொழிக்கதைகளை கூறி அதன் பொருளோடுக் கூற வேண்டும்.

## **தப்பி பிழைத்த மான்** ( விரிவானம் )

### **மதிப்பீடு :**

**அ) வினாக்களுக்கு விடையளிக்க :**

1. நரி, காகத்திடமிருந்து ஏன் மானைப் பிரிக்க எண்ணியது?
காகமும், மானும் இணைபிரியாத நண்பர்கள். அவர்களைப் பிரித்து, மானைக்கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி, காகத்திடமிருந்து மானைப் பிரித்தது.
2. நரியை நண்பனாக ஏற்றுக் கொண்ட மானிடம் காகம் கூறியதென்ன?
நரியை நண்பனாக ஏற்றுக் கொண்ட மானிடம், “நண்பா, யாரையும் நம்பிவிடாதே! அது நமக்குத்தான் ஆபத்து” என்று காகம் கூறியது. மேலும் கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்றது.
3. நரி, மானை எங்கு அழைத்துச் சென்றது?
நரி, மானை விளைச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றது.
4. வலையில் மாட்டிக் கொண்ட மானைக் காகம் எவ்வாறு காப்பாற்றியது?
விவசாயி மானின் அருகில் வரும்வரை மான் இறந்ததுபோல் நடித்தது. விவசாயி மானை வேலியிலிருந்து விடுத்தவுடன், காகம் மரத்திலிருந்து கா....கா.... கா... என்று கரைந்ததால் மான் துள்ளிப்பாய்ந்து வேகமாக ஓடியது.
5. தப்பிப்பிழைத்த மான் கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொண்ட நீதி யாது?
“ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்”.

**ஆ) சிந்தனை வினா :**

1. **நமக்கு நண்பர்களாக இருப்பவர்களிடம் என்னென் நற்குணங்கள் இருக்க வேண்டும்? பட்டியலிடுக.**
அன்பு, உண்மை, நல்லொழுக்கம், இரக்கம், மனிதநேயம், சகிப்புத்தன்மை, சினம் கொள்ளாமை, ஈகைகுணம் ஆகிய நற்குணங்கள் இருக்க வேண்டும்.

## **சொற்றொடர் அமைப்பு முறை** ( விரிவானம் )

### **மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. பெயர்ச்சொல் 2. எழுவாய் 3. செயப்படுபொருள்

**ஆ) எழுவாய், செயப்படுபொருள், பயனிலைகளை எடுத்து எழுதுக.**

| வ.எண். | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | மாதவி | சித்திரம் | தீட்டினாள் |
| 2. | இளங்கோவடிகள் | சிலப்பதிகாரத்தை | இயற்றினார் |
| 3. | அன்பழகன் | மிதிவண்டி | ஓட்டினான் |
| 4. | கிளி | பழம் | தின்றது |

**இ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் இடம் பெற்றுள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. ராதா சித்திரம் தீட்டினாள். 2. பூனை பால் குடித்தது.
3. ராஜா மிதிவண்டி ஓட்டினான்.

**ஈ) எழுவாய், பயனிலை மட்டும் உள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. அமுதன் திருக்குறள் படித்தான். 2. முகிலன் கவிதை எழுதினான்.
3. கீதா பேச்சுப்போட்டியில் பேசினாள்.

**உ) பயனிலை, செயப்படுபொருள் மட்டும் உள்ள தொடர்கள் மூன்று கூறுக.**

1. ஆட்டம் ஆடினான். 2. வண்ணம் தீட்டினாள்.
3. கவிதை பொழிந்தான்.

## கற்பவை கற்றபின்

1. **சொற்றொடரின் அமைப்பு முறையை அறிந்து கூறுக.**

தொடர் அமைப்பில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் கட்டாயம் இடம் பெற வேண்டும். பயனிலை இல்லாமல் தொடர் சில நேரத்தில் அமையலாம்.

எ.கா. தரணி பாடல் பாடினான்.

2. **உன் வகுப்பறையில் மாணவர்களுடன் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் தொடரில் சில இடங்கள் வருவதையும், அவை வராமல் தொடர் அமைவதையும் கலந்துரையாடுக.**

தென்றல் நடனம் ஆடினாள் என்ற தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் தொடரில் வரும். எழுவாய் இல்லாமல் தொடர் அமையும்.

எ.கா. நடனம் ஆடினாள்.

செயப்படுபொருள் இல்லாமல் தொடர் அமையும்.

எ.கா. தென்றல் ஆடினாள்.

பயனிலை இல்லாமல் தொடர் அமையாது.

## மொழியை ஆள்வோம்

2. **சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. மாணவர்கள் - மாணவர்கள் அனைவரும் பள்ளிக்குத் தவறாமல் செல்ல வேண்டும்.
2. விளையும் - விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது பழமொழி.
3. பார்த்தேன் - நான் உங்களை தேநீர்க்கடையில் பார்த்தேன்.
4. இல்லை - நேற்று நான் என் வீட்டில் இல்லை, பாட்டி வீட்டில் இருந்தேன்.
5. வீட்டுப்பாடம் - நான் ஆசிரியர் தரும் வீட்டுப்பாடங்களைத் தவறாமல் முடித்து விடுவேன்.
6. சென்றேன் - நான் நேற்று பூங்காவிற்குச் சென்றேன்.

3. **பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.**

என் உடல் ஏழு நிறங்களால் ஆனது. ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், இளஞ்சிவப்பு என்ற வரிசையில் நிறங்கள் அமைந்திருக்கும். எனது பெயரின் முன்பகுதி என் இருப்பிடம். பின்பகுதி என் வடிவம். என் பெயரைக் கண்டுபிடித்து விட்டாயா?

3. **கதையை நிறைவு செய்க.**

கீழ்க்காணும் பத்தியைப் படித்து மாணவர்கள் தாங்களாகவே மீதிக்கதையைத் தொடர வேண்டும்.

4. **பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. பல்வலி 2. சொத்தையாக 3. பல்துலக்க 4. உறுதியாக

7. **தடித்த சொல் விடையாக வருமாறு வினா அமைக்க.**

1. நீ நாளைக்கு எங்கே செல்வாய்?
2. தினமும் எப்போது படிப்பாய்?
3. உன் தோழியின் பெயர் என்ன?
4. சுற்றுச்சூழலை எப்படி வைத்துக் கொள்ளவேண்டும்?
5. உனக்கு எந்த விளையாட்டு மிகவும் பிடிக்கும்?

8. **பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளி.**

1. சத்யாவின் தோட்டத்தில் நான்கு அணில்குட்டிகள் இருந்தன.
2. நண்பர்கள் இருவரும் சத்யாவின் வீட்டிற்கு அணில்குட்டிகளை பார்க்க வந்தனர்.
3. நண்பர்கள் இருவரும் சத்யாவின் வீட்டிற்கு அணில்குட்டிகளை தங்கள் வீட்டிற்குக் கொண்டு செல்ல விரும்பினர்.
4. நண்பர்களே! இந்த குட்டிகளைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டாம்; நம்மை நம் பெற்றோரிடமிருந்து யாராவது பிரித்தால் நாம் எவ்வளவு துக்கப்படுவோம்; சிந்தித்துப்பாருங்கள் என்று கூறினாள்.
5. நண்பர்கள் அணில்குட்டிகளை எடுத்துச் செல்லவில்லை ஏனெனில் அவர்கள் அணில்குட்டிகளைக் கீழே இறக்கி விட்டனர். அவைகள் மகிழ்ச்சியாகத் தம் தாயோடு இணைந்து கொண்டன.

## மொழியோடு விளையாடு

**1. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எழுதுக.**

1. விவசாயி 2. இயற்கை 3. பனைமரம் 4. புயல் 5. ஆசிரியர்
6. முன்னால் 7. மின்விசிறி 8. மாவட்டம் 9. இரயில்வண்டி 10. மருத்துவர்

**2. கண்டுபிடித்து எழுதுக.**

1. எட்டு 2. புல் 3. வலை 4. மட்டை 5. மல்லிகை 6. அப்பம்

**3. மகாபலிபுரம் - இச்சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

1. மரம் 2. புரம் 3. பலி 4. காரம் 5. புலி 6. புகா

**5. கடல் வளங்களைக் கண்டுபிடிப்போம்.**

1. சிப்பி 2. முத்து 3. பவளம் 4. மீன் 5. ஆமை 6. சங்கு

**6. சரியான சொல்லை எடுத்து எழுதுக.**

1. பல்லி 2. பலம் 3. வளை 4. கோல் 5. புளி

**7. சொற்றொடர் உருவாக்குக.**

1. தலை - உடல் உறுப்புகளில் மிகவும் முக்கியமான உறுப்பு தலை.
   தளை - ஆடு இலை தழைகளைத் தின்னும்.
2. கொடை - பழங்காலத்தில் அரசர்கள் கொடைவள்ளல்களாகவே திகழ்ந்தனர்.
   கோடை - கோடை வெயில் மக்களை வாட்டி வதைக்கும்.
3. பழி - ஒருவர் செய்த தவறுக்காக அவரை பழி வாங்குதல் கூடாது.
   பலி - இரு புள்ளிமான்கள் புலியின் கோரப்பசிக்கு பலியாகின.
4. அரை - ஒன்றில் பாதி அரை.
   அறை - எங்கள் வீட்டில் நான்கு அறைகள் உள்ளன.
5. கறை - வெள்ளைச்சட்டையில் கறை அதிகமாகவே உள்ளது.
   கரை - நான் கிழக்குக் கரையோரத்தில் வசிக்கிறேன்.

இயல் - 4

## எதனாலே, எதனாலே? (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

**அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஆந்தோசைனின் 2. லூசிஃபெரஸ் என்சைம் 3. கோடைக்காலத்திலிருந்து

**ஆ) பொருத்துக.**

1. மேகம் - கறுத்திருக்கும் 2. பறவை - பறக்கும் 3. இலை - உதிரும்
4. ரோஜாப்பூ - சிவக்கும் 5. விண்மீன் - ஒளிரும்

**இ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. வானவில் எப்படி தோன்றுகிறது?
   வானில் உள்ள நீர்த்துளிகளுள் சூரியஒளி ஊடுருவும்போது நீர்த்துளிகளின் மறுபுறமாக எதிரொளிப்பதால் வானவில் தோன்றுகிறது.
2. மின்னல் ஏன் மின்னுகிறது?
   மின்னிறக்கத்தால் மின்னல் மின்னுகிறது.
3. மேகம் கறுப்பாகத் தோன்றக் காரணம் என்ன?
   மேகத்தில் அதிகஅளவு நீர் இருப்பதால் சூரியஒளி ஊடுருவ முடியாது. ஆகவே மேகம் கறுப்பாகத் தோன்றுகிறது.
4. கடலில் ஏன் அலைகள் உண்டாகின்றன?
   பூமியின் மீது சந்திரனின் ஈர்ப்புவிசை செயல்படுவதால், கடலில் அலைகள் தோன்றுகின்றன.

ஈ) சிந்தனை வினா.

1. நாம் வாழும் பூமி, சுழன்று கொண்டேயிருக்கிறது. ஆனால், அதில் வாழும் நாம் சுழல்வதில்லை. ஏன்? விடை காண்போமா?

   1. நாமும், நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் ( பெருங்கடல்கள் மற்றும் காற்று மண்டலம் உட்பட) பூமியுடனேயே சேர்ந்து, பூமி சுழலும் அதே வேகத்திலேயே சுழல்வதால், நமது சுழற்சியை நாம் உணர்வதில்லை.
   2. நாம் ஒரு காரில் வேகமாகச் செல்லும் போது, நாம் இருக்கையிலிருந்து நகர்கிறோமோ? பூமி சட்டென்று சுழல்வதை நிறுத்தினால் மட்டுமே, நம்மால் அதை உணரமுடியும். ஆனால் அது முடியாத செயல்.

## அறிவின் திறவுகோல் ( உரைநடை உலகம் )

### மதிப்பீடு :

அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. அறிவியல் + அறிஞர் 2. பேர் + உண்மை 3. பன்னிரண்டு 4. விரைவாக
5. மரம் + பலகை

ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. நீர் + ஆவி 2. புவி + ஈர்ப்பு 3. வான் + இயல்

இ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. இதயத்துடிப்பு 2. சமையலறை 3. மரத்திலிருந்து 4. தொடங்கியிருப்போம்
5. சிறகடித்து

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஐசக்நியூட்டன் 2. இரேனே லென்னக் 3. ஜேம்ஸ் வாட்

உ) பொருத்துக.

1. ஐசக்நியூட்டன் - புவியீர்ப்பு விசை 2. இரேனே லென்னக் - ஸ்டெதஸ்கோப்
3. ஜேம்ஸ் வாட் - நீராவி இயந்திரம்

ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. மனிதனின் சிந்தனையால் எது வளரத் தொடங்கியது?
   மனிதனின் சிந்தனையால் அறிவியல் வளரத் தொடங்கியது.
2. ஐசக் நியூட்டன், புவியீர்ப்பு விசையைக் கண்டறிய எந்த நிகழ்ச்சி காரணமாக இருந்தது?
   ஐசக் நியூட்டன் ஆப்பிள் மரத்தினடியில் அமர்ந்திருந்தார். அது சமயம், அந்த மரக்கிளையில் அமர்ந்திருந்த பறவை ஒன்று திடீரென சிறகடித்து பறந்து சென்றது. அப்போது ஏற்பட்ட விசையினால், ஆப்பிள் ஒன்று கீழே விழுந்தது. இந்த நிகழ்ச்சியே அவர் புவியீர்ப்புவிசையைக் கண்டறிய காரணமாக இருந்தது.
3. ஸ்டெதஸ்கோப் கண்டுபிடிப்பதற்குக் காரணமான நிகழ்வு எது?
   1. பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களுள் ஒருவன் ஸீஸா என்ற ஒரு வகை மரப்பலகையின் மீது ஒரு முனையில் குண்டூசியால் கீறிக் கொண்டிருந்தான். பலகையின் மறுமுனையில் தன் காதைப் பொருத்தி, எழும்ஒலியைக் கேட்டுக் கொண்டிருந்தான் மற்றொரு சிறுவன்.
   2. பலகையின் ஒரு முனையில் குண்டூசியால் மெதுவாகக் கீறும்போது எழுந்த ஒலி, மறுமுனையில் மிகத் தெளிவாக கேட்பதைக் கண்டான். அச்சிறுவன் இந்நிகழ்ச்சி ஸ்டெதஸ்கோப் கண்டுபிடிப்பதற்குக் காரணமாக அமைந்தது.
4. நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
   நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ்வாட்.
5. அறிவியலறிஞர்களிடம் உற்றுநோக்கும் திறன் உள்ளது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
   1. மரத்திலிருந்து கீழே விழுந்த ஆப்பிளை உற்று நோக்கியதால் உருவானது ஐசக்நியூட்டனின் புவிஈர்ப்பு சக்தி.
   2. “ஸீஸா” என்ற மரப்பலகையில் விளையாடிய சிறுவர்களின் செயல்பாட்டினால் உருவானது இரேனேலென்னக் என்ற மருத்துவர் கண்டறிந்த ஸ்டெதஸ்கோப்

3. நீர் கொதிக்கும் போது வெளியேறும் ஆவியை ஜேம்ஸ்வாட் பார்த்ததால் உருவானது நீராவிஇயந்திரம்.

**எ) சிந்தனை வினா.**

**1. ஒவ்வொரு நிகழ்வுக்குப் பின்னும் ஓர் அறிவியல் உண்மை உள்ளதா? உங்களால் விளக்க இயலுமா?**

1. இரயில் தாண்டவாளங்கள் அமைக்கும்போது இரு தண்டவாளங்ளின் இணைப்புக்கிடையில் சிறிது இடைவெளி விடப்படுகிறது.
2. காரணம் : கோடைக்காலத்தில் வெப்பநிலை அதிகமாகும்போது, தண்டவாளங்கள் நீள்பெருக்கம் அடையும். இதனால் இடைவெளி விடப்படுகிறது.

**2. நீரில் நீந்தும் மீனால், நிலத்தில் வாழ முடிவதில்லையே, ஏன்?**

நீரில் நீந்தும் மீனால், நிலத்தில் வாழ முடிவதில்லை:

மீன்களுக்கு நுரையீரல் இல்லை. அவற்றிற்குள் செவுள்களின் மூலம் அவை சுவாசிக்கின்றன. இந்த செவுள்கள் நீரில் உள்ள ஆக்ஸிஜனை மட்டுமே எடுத்துக் கொள்ளமுடியும். காற்றிலுள்ள ஆக்ஸிஜனை எடுத்துக் கொள்ளமுடியாது. ஆதலால், மீன்களால் நீரில் மட்டுமே வாழ முடியும்.

## **நானும் பறக்கப் போகிறேன்** ( விரிவானம்)

**மதிப்பீடு :**

**அ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. காற்று + பைகள்  2. உடல் + அமைப்பு  3. எடை + உடன்  4. இவற்றில் + இருந்து

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. எலும்புகளிலும்  2. 1903 - ம் ஆண்டு

**இ) வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. தன்னால் பறக்க முடியாததற்கு கோதை கூறிய காரணம் என்ன?**

பறவையை விட அதிக எடையுடன் இருப்பதால்தான் தன்னால் பறக்க முடியவில்லை என்று கோதை கூறினாள்.

**2. பறப்பதற்கு ஏற்ற வகையில் பறவையின் உடலமைப்பு எவ்வாறு உள்ளது?**

பறவையின் இறகுகளிலும், எலும்புகளிலும் காற்றுப்பைகள் உள்ளன. இவை பறப்பதற்கு ஏற்ற வகையில் உள்ளன.

**3. பறவைகள் திசைமாறிப் பறப்பதற்கு எது உதவுகிறது?**

பறவைகள் திசைமாறிப் பறப்பதற்கு அதன் பின்புறவால் துடுப்பு போல செயல்படுகிறது.

**4. பறக்கும் விமானத்தைக் கண்டறிந்தவர்கள் யார், யார்?**

ரைட்சகோதரர்கள் என்றழைக்கப்படும் ஆர்வில்ரைட், வில்பர்ரைட் இருவரும் அமெரிக்காவைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்கள் ஆவர்.

## **மூவிடப்பெயர்கள்** ( கற்கண்டு )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நடந்தது.  2. வரைந்தார்.  3. நான்  4. நீங்கள்

**ஆ) பொருத்துக.**

1. தன்மைப்பெயர் - நாம்  2. முன்னிலைப்பெயர் - நீவிர்  3. படர்க்கைப்பெயர் - அவை

**இ) உரைப்பகுதியில் பொருத்தமான இடப்பெயர்களை எழுதுக.**

1. என்  2. நான்  3. எனது  4. சகோதரர்  5. நமது  6. எனது  7. தாயார்
8. நான்

**ஈ) தொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என வகைப்படுத்துக.**

1. ராமன் - படர்க்கை  2. நாங்கள் - தன்மை  3. அனு - படர்க்கை
4. நீ - முன்னிலை  5. நமது - தன்மை

## மொழியை ஆள்வோம்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. வியப்பு - என்னே! திருவள்ளுவர்சிலையின் உயரம் என்னே!
2. பறவை - மயில் ஒரு அழகானப் பறவை.
3. இலை - தாமரை இலையில் நீர் ஒட்டாது.
4. விமானம் - விமானத்தைக் கண்டறிந்தவர்கள் ரைட் சகோதரர்கள் ஆவர்.
5. அறிவியல் - அறிவியலின் வளர்ச்சி ஆக்கத்திற்கு பயன்படுத்துகிறது.

**3. பொருத்துக.**

1. மின்மினி - லூசிஃபெரேஸ் 2. இறகின் தொகுப்பு - சிறகு
3. ரோஜாப்பூ - ஆந்தோசைனின் 4. விமானம் - ரைட் சகோதரர்கள்
5. மின்னல் - மின்னிறக்கம்

**4. பிழைகளைக் கண்டுபிடித்துக் கோடிடுக. பின் திருத்தி எழுதுக.**

1. வரைந்தார்கள் - வரைந்தான் 2. அலகாக இருந்துச்சு - அழகாக இருந்தது.
3. காட்சியை வெச்சான் - காட்சியில் வைத்தான் 4. கண்காட்சியை - கண்காட்சிக்கு
5. பெற்ரோரும் - பெற்றோரும் 6. வந்தன - வந்தனர்
7. அவகைள் - அவர்கள் 8. கன்காட்சியை - கண்காட்சியை
9. மகிழ்ந்தாங்க - மகிழ்ந்தார்கள்

**5. பிறமொழிச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் எழுதுக.**

1. நான் தொலைக்காட்சியை பார்த்தேன் 2. உணவகத்தில் உணவு தயாராக உள்ளது.
3. நாங்கள் கோடைவிடுமுறைக்கு சுற்றுலா சென்றோம். 4. பிரகாசமாக விளக்கு எரிந்தது.

**6. ஒரு பொருள் தரும் பல சொற்களை எழுதுக.**

1. கதிரவன் - ஞாயிறு, சூரியன், பகலோன், பரிதி 2. நிலவு -
3. உலகம் - 4. அழகு -
5. கடல் -

**7. மொழியாக்கம் தருக.**


1. அறிவியல் அறிஞர் 2. ஆச்சர்யம் 3. முயற்சி 4. மேகங்கள் 5. மின்னல்

**8. உனக்குத் தெரிந்த அறிவியல் அறிஞரைப் பற்றி ஐந்து வரிகளில் எழுதுக.**

1. ரைட்சகோதரர்கள் என்றழைக்கப்படும் ஆர்வில்ரைட், வில்பர்ரைட் இருவரும் அமெரிக்காவைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்கள் ஆவர்.
2. இவர்கள் 1903 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 - ஆம் தேதி பெட்ரோல் இயந்திரம் பூட்டிய வானூர்தியில் முதன்முதலாக பூமிக்கு மேல் 12 வினாடிகள் 120 அடி தூரம் பறந்து சாதனை படைத்தனர்.
3. விமானம் பறந்த தினத்தை ரைட்சகோதர்கள் ஆண்டுதோறும் கடைப்பிடித்து வருகின்றனர்.
4. வில்பர்ரைட் 1912 - ஆம் ஆண்டிலும், ஆர்வில்ரைட் 1948 - ஆம் ஆண்டிலும் மரணமடைந்தனர்.

## மொழியோடு விளையாடு

**1. ஒரே ஓசையில் முடியும் பெயர்களைக் கொண்ட படங்களை இணைக்க.**



**2. சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.**

பட்டுக்கோட்டை :

பட்டு, கோட்டை, கோடு, கோடை, படை, பட்டை, கோட்டு, படு,

**3. குறிப்புகளைப் படித்து, விடை கண்டறிக.**

1. பட்டம் 2. வானம் 3. கப்பல் 4. துடுப்பு 5. குதிரை 6. விமானம்
7. படகு 8. வானவில் 9. கண்ணாடி 10. காலை

4. **பாடப்பகுதியில் "சுற்றும்முற்றும்", "ஓட்டமும்நடையுமாய்" என்று சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றிக்கு இணைச்சொற்கள் என்று பெயர். இவை போன்று நான்கு சொற்கள் எழுதுக.**

   1. கண்ணங்கருத்துமாக 2. அடுக்கடுக்காக 3. இன்பமும்துன்பமும் 4. இரவும்பகலும்

5. **ஒரே ஓசையுடைய சொற்களின் பொருள் எழுதுக.**

   2. கடல், பறக்கும் உயிரினம் 3. கூறுதல், கொல்லுதல் 4. எழுத்து, நிறம்

   5. சுவர், மலை போன்றவற்றில் பட்டு மீண்டும் கேட்குமாறு திரும்பி வரும் ஒலி, கண்ணாடி போன்ற பளபளப்பான பரப்பில் பட்டுத் திரும்பி வரும் ஒளி.

6. **ஒரு சொல்லைப் பிரித்து இரு பொருள் எழுதுக.**

   2. தீவு, அந்த + மான் = அந்த மான் (விலங்கு) 3. தாமரை மலர், தா + மரை = தாவுகின்ற மான்

   4. பழைய பால், பழம் + பால் = பாலும், பழமும்

   5. மருந்து விற்கும் கடை, மருந்து + கடை = மருந்தினைக் கடைவது.

இயல் - 5

## திருக்குறள் (கவிதைப்பேழை)

### மதிப்பீடு :

**அ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. உயர்ந்த 2. நயன் 3. பெருமை + செல்வம் 4. அதுவின்றேல் 5. பண்பு + உடைமை

**ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. இ + இரண்டும் 2. மக்கள் + பண்பு

**இ) உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுக.**

அன்புடைமை, ஆசிரியர், இகழ்தல், ஈகை, உதவி, ஊன்றுகோல், எய்யாமை, ஏகன், ஐம்பால், ஒற்றுமை, ஓங்காரம், ஔவியம்.

**ஈ) இப்பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் உள்ள சொற்களை எடுத்து எழுதுக.**

பண்புடையார் - மண்புக்கு, நயனொடு - பயனுடையார், அரம்போலும் - மரம்போல்வர்.

**உ) அன்புடைமை, பண்புடைமை போல் ஈற்றில் மை என முடியும்படி நான்கு சொற்கள் எழுதுக.**

அசைவின்மை, ஆசையின்மை, அறியாமை, நேர்மை, அளவின்மை, ஏழ்மை, அழியாமை, கல்லாமை

**ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?**

   அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்களாகும்.

2. **"மரம் போன்றவர்" எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?**

   அரத்தைப் போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர், மரத்தைப் போன்றவர் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

3. **பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனிலாது போகும்?**

   பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமானது, தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது பயனில்லாமல் போகும்.

**எ) சிந்தனை வினா.**

1. **ஒருவரின் பண்புகளைக் கொண்டே, இந்த உலகம் அவரை மதிக்கிறது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

   1. ஒருவரின் பண்புகளைக் கொண்டே, இந்த உலகம் அவரை மதிக்கிறது.
   2. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று புறநானூறு கூறுகிறது.
   3. ஒருவர் நற்செயல்களைச் செய்து, அன்புடன் பேசுதல், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணுதல், இன்சொல் பேசுதல் ஆகிய நற்பண்புகளுடன் செயல்புரிந்தால் அவரை இவ்வுலகம் மதிக்கும் என்பதில் ஐயமில்லை.

**கற்பவை கற்றபின்**

1. **நம்மிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.**

இரக்கம், ஈகை, நடுவுநிலை, கருணை, சான்றாண்மை (நெறி பிறழாமல் வாழ்வது)

## தமிழர்களின் வீரக்கலைகள் ( உரைநடை உலகம் )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. மட்டைப்பந்து 2. ஏறுதழுவுதல் 3. மல் + போர் 4. தற்காப்பு 5. வில்வித்தை

**ஆ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. சிலம்பாட்டம் 2. வீரக்கலை

**இ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. தனக்கு + என்று 2. கொடை + திறம்

**ஈ) பொருத்துக.**

1. காளை - திமில் 2. சிலம்பம் - கம்பு 3. சிறுவாரைக்கம்பு - மூங்கில்
4. தாளாண்மை - முயற்சி 5. வேளாண்மை - உழவு

**உ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **தமிழர்களின் வீரக்கலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.**

1. ஏறுதழுவுதல் 2. சிலம்பம்

2. **ஏறுதழுவுதல் என்றால் என்ன?**

ஏறுதழுவுதல் என்பது மஞ்சுவிரட்டு அல்லது ஜல்லிக்கட்டு. இது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளைமாட்டைக் குறிக்கும். காளைமாட்டை ஓடவிட்டு அதைத் தழுவி அதன் வீரத்தை அடக்குவது அல்லது கொம்பை இறுகப்பிடித்து கீழே வீழ்த்துவது தான் ஜல்லிக்கட்டு விளையாட்டாகும்.

3. **சிலம்பாட்டம் - பெயர்க்காரணம் தருக.**

சிலம்பம் என்பது ஒரு தடி தற்காப்புக்கலை மற்றும் தமிழர்களின் வீரவிளையாட்டாகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்புசுற்றுதல் என்றும் கூறுவர். சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள். கம்பு சுழலும் போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் எனப் பெயரிட்டனர்.

4. **வல்வில் ஓரியின் வில்லாற்றல் சிறப்பைக் கூறுக.**

ஓரி அம்பு எய்தான். அது யானையை வீழ்த்தியது. அடுத்து உழுவைப் புலியை சாகடித்தது. அடுத்து மானை உருண்டு விழச்செய்தது. அடுத்து முள்ளம்பன்றியை வீழ்த்தியது. இறுதியாகப் புற்றிலிருந்த உடும்பின் உடலில் தைத்துக்கொண்டு நின்றது என்னும் புறநானூற்றுப்பாடல் வழி அறிகிறோம். படைத்திறனும், கொடைத்திறனும் கொண்டு விளங்கிய வல்வில்ஓரியை வன்பரணர் இவ்வாறு பாடி மகிழ்ந்தார்.

5. **மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது?**

இருவர் கைகோர்த்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும், உதைத்தும் ஒருவருடன் ஒருவர் போர் செய்வதே மற்போர்.

6. **கபடி ஆட்டத்தின் விதிமுறைகளைக் கூறுக.**

கபடி என்பதற்கு கை + பிடி = கபடி என்பது பொருள். இவ்விளையாட்டு இரு அணிகளுக்கு இடையே நிகழும் ஆட்களைப் பிடிக்கும் போட்டி. இது விதிமுறைகளுடன் கூடிய விளையாட்டு. ஒவ்வொரு அணியிலும் ஏழு பேர் இருப்பர். மொத்த விளையாட்டு 40 நிமிடங்கள். இதன் ஆடுகளம் நீள்சதுரமாக இருக்க வேண்டும். சரிபாதியாகப் பிரித்து பக்கத்திற்கு ஒரு அணியாக விளையாடுவர். பாடிச்செல்வது கபடி விளையாட்டின் அடிப்படையாகும். முதல் அணியினர் பாடிக்கொண்டே இரண்டாம் அணியை வெற்றி கொள்ள நெருங்குவர்.

ஊ) சிந்தனை வினாக்கள்.

1. **சிலம்பாட்டம் தற்காப்புக்கலைகளுள் ஒன்று. ஏன்?**
   1. சிலம்பாட்டம் தற்காப்புக்கலைகளுள் ஒன்று தான்.
   2. ஏனென்றால் சிலம்பு எடுத்து சுழற்றும்போது உடம்பில் உள்ள ஒவ்வொரு நாடி, நரம்பும் தசைகளும் இயக்கப்படுகின்றன.
   3. கம்பைக் கைகளால் பிடித்து, தன்னைச் சுற்றிலும் சுழற்றிச் சுற்றும்போது தம் உடலைச் சுற்றிலும் ஒரு வேலி போன்ற அமைப்பை உருவாக்கிட முடியும்.
   4. ஒரே ஒரு தடியைக் கொண்டு அமைக்கும் இது போன்ற வேலிக்குள் வேறு ஆயுதங்களைக் கொண்டு யார் தாக்க முற்பட்டாலும் அதனை சுழற்றும் கம்பால் தடுத்திட முடியும்.
2. **உடலில் உறுதி உடையவரே உலகை ஆளும் உள்ள உறுதி உடையவர். இவ்வரிகளைப் பற்றி உமது கருத்து யாது?**

   சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும். நம் உடல் நலம் நன்றாக இருந்தால் தான் உள்ளமும் நன்றாக இருக்கும். உடல் வலிமை பெறும்போது எதையும் தாங்கும்திறனைப் பெற முடியும். தெளிவான மனம் அமையும். சோம்பலின்றி சுறுசுறுப்பாகச் செயலாற்ற முடியும். உள்ளம் துடிதுடிப்பாக இருக்கும். அதனால் உலகை ஆளும் அளவிற்கு உள்ள உறுதியைத் தருகிறது.

எ) எதிர்ச்சொல் உருவாக்குக.

1. இன்பம் **X** துன்பம்
2. இயற்கை **X** செயற்கை
3. வாழ்தல் **X** வீழ்தல்
4. இன்சொல் **X** வன்சொல்
5. நிறைந்த **X** குறைந்த
6. போற்றும் **X** தூற்றும்

## கங்கை கொண்ட சோழபுரம் (விரிவானம்)

### மதிப்பீடு :

அ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. **முதலாம் இராசேந்திர சோழனை ஏன் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கிறோம்?**

   முதலாம் இராசேந்திர சோழன் வடநாடு சென்று பகைவர்களை வென்று கங்கை நீரைக் கொண்டு வந்ததன் அடையாளமாகத் தான் கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கிறோம்.
2. **"சிங்க முகக் கிணறு" - குறிப்பு எழுதுக.**

   சிங்க வடிவத்தில் சிங்கமுகக் கிணறு அமைந்திருக்கும். இந்தச் சிற்பத்தின் வயிற்றில் ஒரு வாயில் இருக்கும்.
3. **சோழ கங்கப் பேபேரரிக்கு நீர் எங்கிருந்து வருகிறது?**

   மலைகளும், குன்றுகளும் இல்லாத சமவெளியில் பதினாறு கல் தொலைவு வரை வலிமையான உயரமான கரைக்களைக் கட்டி, நீண்டகால்வாய் வெட்டித் தண்ணீரைப் பள்ளத்தாக்கிலிருந்து மேட்டிற்குக் கொண்டு வந்து, ஏரியில் தேக்கி வைத்தனர். சோழ கங்கப் பேரேரி இன்றி பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது.
4. **கங்கை கொண்ட சோழபுரம் கோவிலிலுள்ள வாயில்களின் பெயர்களைக் கூறுக.**

   தெற்குப் பக்க நுழைவாயில், வடக்குப் பக்க நுழைவாயில்.

ஆ) சிந்தனை வினா.

1. **ஏரிகளும், குளங்களும் தூர் வாரப்படாமல் மண்மூடி இருந்தால் என்ன ஆகும்? கருத்துகளைக் குழுவில் பகிர்ந்து கொள்க.**
   1. ஏரிகளும், குளங்களும் தூர் வாரப்படாமல் மண்மூடி இருந்தால் மழைநீரைத் தேக்கி வைக்க முடியாது.
   2. நிலத்தடி நீரின்றி மக்கள் துன்பப்படுவர்.
   3. விவசாயத்திற்குப் போதுமான நீர் கிடைக்காது.
   4. நீர்நிலைகள் மண் மூடிய நிலையில் உள்ளதால், மழைக்காலங்களில் வரும் மழைநீர் சிறிதளவே தேங்கும். உபரிநீர் வீணாகக் கடலில் கலந்து விடும்.
   5. கோடைக்காலங்களில் நீர்நிலைகளைத் தூர்வாரி நிலத்தடி நீரைச் சேமிக்க வேண்டும்.

## இணைப்புச்சொற்கள் ( கற்கண்டு )

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இணைப்புச்சொல் 2. ஆயினும் 3. ஆனால்

**ஆ) கீழ்க்காணும் தொடர்களை இணைத்து எழுதுக.**

2. வள்ளி எழுதி முடித்து விட்டாள். ஆனால் எழிலி எழுதவில்லை.
3. பெருமழை பெய்தது. அதனால் ஏரி, குளங்கள் நிரம்பின.
4. முகில் பள்ளிக்குச் செல்லவில்லை. ஏனெனில் அவனுக்கு உடல்நலமில்லை.
5. அறிவு வளர்ச்சிக்குக் கணினி தேவை. ஆகவே கணினியை இயக்கத் தெரிதல் வேண்டும்.

**இ) கீழ்க்காணும் உரைப்பகுதியில் பொருத்தமான இணைப்புச்சொற்களை இணைத்து எழுதுக.**

1. ஆனால் 2. ஏனெனில் 3. ஆகையால் 4. எனவே 5. ஆனால் 6. அதனால்
7. பிற 8. ஏனெனில்

**ஈ) வினாக்களுக்கு விடையளிக்க**

**1. இணைப்புச்சொற்கள் எதற்குப் பயன்படுகின்றன?**

தங்குத் தடையின்றி எழுதவும், பேசவும் இணைப்புச்சொற்கள் பயன்படுகின்றன.

**2. இணைப்புச்சொற்கள் நான்கு எழுதுக.**

ஏனெனில், ஆகையால், எனவே, ஆனால்

**3. இணைப்புச்சொற்களைப் பயன்படுத்தி எவையேனும் இரண்டு தொடர்களை எழுதுக.**

1. கண்ணன் வந்து விடுகிறேன் என்றான். ஆனால் இன்னும் வரவில்லை.
2. நான் தாய்நாட்டிலேயே பணியாற்ற விரும்புகிறேன். ஆகையால் வெளிநாடு செல்லமாட்டேன்.

### மொழியை ஆள்வோம்

**2) சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. வெற்றி : நான் பத்தாம்வகுப்பு தேர்வில் முதல் மாணவனாக வெற்றி பெற்றேன்.
2. நாகரிகம் : தனக்கென்று தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழ்மரபு.
3. உழவுத்தொழில் : கண்ணன் தன் விடாமுயற்சியால் உழவுத்தொழிலில் வளம் பெருக்கினான்.
4. கலையழகு : தஞ்சை பெரிய கோவில் கலையழகின் மொத்த உருவமாகும்.
5. பண்பு : பண்பு உடையவராக வாழ்தல் நல்வழியாகும்.
6. வீரவிளையாட்டு : வீரவிளையாட்டுகளில் மிகவும் புகழ்பெற்றது சல்லிக்கட்டு விளையாட்டாகும்.
7. அஞ்சா நெஞ்சம் :
8. ஆயுதம் : பழங்காலத்தில் போர் புரியும் நேரத்தில் ஈட்டி, வில், அம்பு போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

**3) உரைநடையைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பழங்காலத்தில் பாட்டு, இசை போன்ற கலைகள் எல்லாம் கூட்டுக்கலைகளாக இருந்தன.
2. யாழ் என்னும் கருவி வில், மீன் வடிவங்களில் செய்யப்பட்டன.
3. மாணவர்கள் தாங்களாகவே முன் வந்து வீணை படத்தை வரைய வேண்டும்.
4. வீணை, யாழ், தம்புரா, நாதஸ்வரம்
5. மரத்தினால் செய்யப்பட்டுக் கம்பிகளால் பூட்டப்படுவதே நரம்புக்கருவியாகும்.

**4) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மரத்தைப் 2. கங்காபுரி 3. சிலம்பாட்டம்

**5) பிறமொழிச்சொற்களையும், பேச்சுப்பிழையும் நீக்கிச் சரியாக எழுதுக.**

1. பகிர் தானியங்கியில் ஐந்து பயணிகள் இருக்கிறார்கள்.
2. என் வீட்டில் சலவைஇயந்திரம் பழுதாகி இருக்கிறது.

6) **பொருத்துக.**

1. தொடர்வண்டி - 
2. மிதிவண்டி - 
3. தானியங்கி - 
4. இரு சக்கர வண்டி - 
5. மகிழுந்து - 
6. சரக்குந்து - 
7. பேருந்து - 

7) **பாடலை நிறைவு செய்க**

திருவிழாவாம் திருவிழா
எங்கள் ஊர்த் திருவிழா
ஊர் கூடும் திருவிழா
உறியடிக்கும் திருவிழா
பெண்கள் கூடும் திருவிழா
கும்மியடிக்கும் திருவிழா
கரகமாடும் திருவிழா
கொண்டாடும் திருவிழா

8) **கீழ்க்காணும் குறட்பாக்களிலுள்ள சொற்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்துக.**

| உயிர் எழுத்து இடம் பெறாத சொற்கள் | மெய் எழுத்து இடம் பெறாத சொற்கள் |
|---|---|
| நயனொடு, நன்றி<br>புரிந்த<br>பயனுடையார்<br>பண்புபா ராட்டும்<br>குடிப்பிறத்தல்<br>வழக்கு | உலகு<br>நயனொடு |

**தமிழோடு விளையாடு**

1) **சுழலட்டையைப் பயன்படுத்திக் குறிப்புகளுக்கு விடை எழுதுக.**

1. கண் 2. கடல் 3. கல்வி 4. கடை 5. கடுகு 6. கல்
7. கலை 8. கவிதை

2) **நீக்குவோம்! சேர்ப்போம்!**

1. விடுகதை 2. சக்கரம் 3. விடுதலை 4. ஆலமரம் 5. கடிகாரம்

இயல் - 6 **உழவுப்பொங்கல்** ( கவிதைப்பேழை )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. உலகம் 2. நலன் + எல்லாம் 3. நிறைந்தது + அறம்

**ஆ) எதிர்ச்சொல் தருக.**

1. எளிது 2. துன்பம் 3. புதுமை 4. குறை 5. சிறுமை

**இ) பாடலின் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக.**

பொங்குக - பொங்கல் - பொங்குகவே   உணவு - உயிரோடிருப்பது - உழவு - உடையும்
பழகும் - பயிர்த்தொழில்

**ஈ) பாடலின் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக.**

பொங்குக - பொங்கல் - பொங்குகவே   தங்குகவே - எங்கணும் - தங்கமும்
உணவும் - பணமும்   பழகும் - உழவு

**உ) பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

பொங்குகவே - தங்குகவே   உணவுதரும் - அணியவரும்
உணர்ந்திடுவோம் - துணிந்திடுவோம்

**ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அனைவரும் இன்பமுடன் வாழத் தெம்பு தரும் தொழில் எது?
   அனைவரும் இன்பமுடன் வாழத் தெம்பு தரும் தொழில் உழவுத்தொழில்.
2. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
   1. எங்கும் யாவரும் இன்பமாய் வாழ்வதற்கு உழவுத்தொழில் பயன்படுகிறது.
   2. பயிர்கள் விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவு கிடைக்கும்; உடையும் தரும்.

3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

பொருளில்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல்திருநாளே. ஆகையால், ஏற்றம் தரும் ஏர்த்தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவு பொங்கலிட்டுப் பயிர்வளம் பெருக்க வேண்டுமென கவிஞர் கூறுகிறார்.

**எ) சிந்தனை வினா.**

1. "உழவுத்தொழில் இல்லையென்றால் நாடு என்னவாகும்" - இது பற்றி உங்கள் கருத்தென்ன?

உழவுத்தொழில் நடைபெறவில்லையெனில் நாம் உணவின்றிதான் வாழ வேண்டும். உழவர்கள், பயிர்களை விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவு கிடைக்கும்; உணவுப்பயிர்களே நமக்கு உணவாக அமைகிறது. எனவே, உழவர் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கருத்தாகும்.

## விதைத்திருவிழா ( உரைநடை உலகம் )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. இசைவு 2. விளம்பரம் + தாள்கள் 3. சிந்தித்தல் 4. தோட்டக்கலை 5. புதிய காலம்

**ஆ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. அழைப்பு + இதழ் 2. விதை + திருவிழா

**இ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. வழிபாட்டுக்கூட்டம் 2. வீட்டுத்தோட்டம்

**ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 27 2. தரம் 3. நவதானியங்களுள் 4.

**உ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?

மாணவர்களை அருகிலுள்ள மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் விதைத்திருவிழாவிற்கு அடுத்த வாரம் அழைத்துச் செல்வதாக தலைமையாசிரியர் கூறினார்.

2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?

ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் விதைத்திருவிழா தொடர்பான செய்தி இருந்தது.

3. "பாதிப்பு" என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

இரசாயன விதைகள், இரசாயனப் பூச்சிமருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைத் தாம் "பாதிப்பு" என்று சொல்கிறார்கள். இதனால் மண்ணின் தன்மை கெடுகிறது. இதனைத் தடுக்கும் வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

4. நவதானியங்களுள் ஐந்தின் பெயரை எழுதுக.

கொண்டைக்கடலை, தட்டை, மொச்சை, பாசிப்பயிறு, கோதுமை

**ஊ) சிந்தனை வினா.**

1. செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்யலாம்?

செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் செய்ய வேண்டுவன :

1. இயற்கை வேளாண்மையைக் கடைபிடிக்க வேண்டும். 2. மண்புழு வளர்த்தல்.
3. கால்நடைகள் வளர்த்து அவற்றின் சாணங்களை எருவாக்குதல்.
4. அவுரிச் செடிகளை வளர்த்து வயிலுக்கு எருவாக்குதல்.

## கற்பவை கற்றபின்

மாணவர்கள் தாங்களாகவே செய்து வகுப்பறைக்குக் கொண்டு வர வேண்டும்.

## நேர்மை நிறைந்த தீர்ப்பு ( விரிவானம் )

### மதிப்பீடு :

அ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. **அரசியிடம் கிராமத்தலைவர் கொண்டுவந்த வழக்கு யாது?**

ஒரு நாள் கிராமப்பஞ்சாயத்துத்தலைவர் ராணியிடம் ஒரு வழக்கைக் கொண்டுவந்தார். வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு வாதிகளையும் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்து வந்தார். அரசியை வணங்கி தம் வழக்கை எடுத்துரைத்தார்.

செல்வந்தர் ஒருவர், அரிய சாதனை புரிபவருக்கு நூறு பொற்காசுகள் கொண்ட பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாக அறிவித்து, அதனை ஊர் பஞ்சாயத்தாரிடம் கொடுத்தார். பொற்கிழியைப் பெறுவதற்கு அந்தக் கிராமத்தின் சாதனையாளர்களிடையே கடும் போட்டி நிலவியது.

அதில் நான்கு பேர் தங்கள் சாதனைகளைச் சொல்லி ஒவ்வொருவரும் தாங்களே பொற்கிழியைப் பெறத் தகுதியானவர் என்று வாதிட்டனர். யாருடைய சாதனை சிறந்தது என்பதை முடிவு கட்ட முடியாத பஞ்சாயத்தார், பரிசுத்தொகையை நால்வருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்க முடிவு செய்தனர். ஆனால் அந்நால்வரும் அதற்கு உடன்படாததால் வழக்கு ராணியிடம் வந்ததை பஞ்சாயத்துத் தலைவர் எடுத்துரைத்தார். எனவே தாங்களே இவர்கள் செய்த சாதனையை விசாரித்து தகுதியானவருக்கு பொற்கிழியை வழங்கி சரியான தீர்ப்பளிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார். அரசியார் சாதனையாளர் நால்வரையும் கனிவுடன் நோக்கினார்., நன்று. ஒவ்வொருவராக உங்கள் சாதனையைச் சொல்லுங்கள், என்று ஆணையிட்டார்.

2. **சிவப்பிரகாசம் தாம் என் சாதனை புரிந்துள்ளதாகக் கூறினார்?**

சிவப்பிரகாசம் என்பவர் நான் ஒரு வியாபாரி. பல்பொருள் அங்காடி நடத்தி வருகிறேன். ஒரு நாள் சிறுமி ஒருத்தி என் அங்காடியில் பொருள்கள் வாங்க வந்தாள். அதுசமயம் வாடிக்கையாளர்கள் கூட்டம் நிறைந்திருந்தது. பை நிறைய பொருள்களை வாங்கினாள். நான் வேலையில் மும்முரமாக இருப்பதைக் கவனித்த அவள் நான் அசந்த சமயம் பார்த்து வாங்கிய பொருள்களுக்குப் பணம் கொடுக்காமல் நழுவப் பார்த்தாள். வேகமாக அவள் தெருவை கடந்து செல்ல முயன்றபோது தெருவில் வந்த காளைமாடு, ஆவேசமாக அச்சிறுமியை முட்டப்போனது. நான் பாய்ந்து சென்று அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றினேன். இத்தனைக்கும் எனக்கும் அவள் தந்தைக்கும் நீண்டநாள் பகை. நிலத்தகராறில் அடிதடி வரை கூடப் போய்விட்டோம். அப்படி இருந்தும் அவர் மகளை நான் காப்பாற்றினேன். அதைக் கண்ட ஊர் மக்கள் அனைவரும் என்னைப் பாராட்டினார்கள். ஓர் உயிரை சினம் கொண்ட விலங்கிடம் காப்பாற்றியது அதுவும் பகைவனின் மகளைக் காப்பாற்றியது பெரிய சாதனை இல்லையா? எனவே பொற்கிழியை எனக்கே கொடுக்க வேண்டும் என்கிறேன் என்று சொன்னார்.

3. **விவசாயின் சாதனைதான் உயர்ந்தது என்று அரசி கூறக் காரணம் என்ன?**

முதியவர், ஏழை விவசாயி தன் ஒரே மகளின் உதவியுடன் தமது ஒரே ஒரு காணி நிலத்தில் மூன்றுமடங்கு நெல்விளைச்சலை அதிகரித்து சாதனைப் படைத்துள்ளார். உண்மையில் இது பெரிய சாதனைதான். அவர் எந்த அளவிற்கு கடுமையாக உழைத்திருந்தால், இந்த அளவு பலன் காணமுடியும்! அவரது இடைவிடாத உழைப்பால், மேலும் பத்துக் குடும்பங்களுக்குப் பயன் கிடைத்துள்ளது. நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாயியும் இப்படிச் சாதனை செய்தால் பஞ்சம், பசி இருக்காது; நோய் நொடி இருக்காது; வறுமையும் இருக்காது. எனவே பொற்கிழியைப் பெறத் தகுதியானவர் இவர் தான். இவருக்கே பொற்கிழியை வழங்க ஆணையிடுகிறேன் என்று நேர்மை நிறைந்த தீர்ப்பை வழங்கினார் மங்கையர்க்கரசி. அவரது தீர்ப்பைக் கேட்டு, மக்கள் எல்லோரும் அவரை வாழ்த்தினர்.

ஆ) சிந்தனை வினா

1. **நீ பேருந்தில் பயணம் செய்யும் போது, பணப்பை ஒன்று பேருந்து இருக்கையில இருப்பதைக் காண்கிறாய். இந்நிலையில் நீ செய்யப் போவது என்ன?**

அ) பணப்பையை உரியவரிடம் கொடுப்பேன்.

## அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ( கற்கண்டு )

### மதிப்பீடு :

அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. விண்விண் 2. புலபுல 3. கூகூ 4. வாழ்க வாழ்க

ஆ) பொருத்துக.

1. கலகலவென - ஒலிக்குறிப்பு 2. நறநறவென - சினக்குறிப்பு
3. தடதடவென - விரைவுக்குறிப்பு

இ) கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருந்துமாறு இரட்டைக்கிளவி / அடுக்குத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தாவித்தாவிச் 2. படபடவென 3. சலகலவென 4. கூட்டங்கூட்டமாக
5. பொத்து பொத்து 6. தபதபவென 7. துள்ளித்துள்ளி 8. கருகருவெனத்
9. பளபளவென 10. சடசடவென 11. மடமடவென

### கற்பவை கற்றபின்

1. இரட்டைக்கிளவிகளைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.

1. சிலுசிலு எனக் காற்று வீசியது. 2. கமகம என மலர்ந்தது முல்லை
3. மளமள என வேலையைச் செய்.

2. உரைப்பகுதிகளில் காணப்படும் அடுக்குத்தொடர்களைத் தொகுத்து எழுதுக.

1. திரும்ப திரும்ப 2. வா வா 3. பாம்பு பாம்பு 4. போ போ

### மொழியை ஆள்வோம்

2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. திருவிழா : திருவிழா என்றாலே அனைவருக்கும் பிடிக்கும்.
2. இரசாயன விதை : இரசாயன விதைகள் பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை கெடுகிறது.
3. விளம்பரப் பலகை : விளம்பரப்பலகையைப் பார்த்துப் படித்தான் கந்தன்.
4. வீட்டுத்தோட்டம் : என் வீட்டு மொட்டைமாடியில் வீட்டுத்தோட்டம் அமைத்திருக்கிறேன்.
5. பழங்காலம் : பழங்கால விவசாயத்தில் இயற்கைஉரங்கள் பயன்படுத்தப்பட்டன.

3. ஒரு பொருள் தரும் பல சொற்களை எழுதுக.

1. வயல் - செய், கழனி 2. உழவு - ஏர், வேளாண்மை 3. மகிழ்ச்சி - இன்பம், களிப்பு
4. வீடு - மனை, இருப்பிடம் 5. பேசு - சொல், செப்பு

4. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பண்டைக்காலத்திலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் பயிர்த்தொழில்.
2. முற்காலத்தில் தமிழர் உழுதுண்டு வாழவே விரும்பினார்கள்.
3. ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது.
4. கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால் தமிழர் உள்ளம் துள்ளி மகிழும்.
5. மேகம், மின்னல்.

### மொழியோடு விளையாடு

1. உழவுத்தொழிலுடன் தொடர்புடைய பழமொழிகளின் சொற்கள் இடம் மாறியுள்ளன. அவற்றை முறைப்படுத்தி எழுதுக.

1. ஆடிப்பட்டம் தேடி விதை. 2. சீரைத் தேடின் ஏரைத் தேடு. 3. அகல உழுவதை விட ஆழ உழு.

2. கீழ்க்காணும் பாடலிலுள்ள தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

1. இருவினை - நல்வினை, தீவினை 2. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
3. நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
4. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல, பாலை
5. அறுசுவை - இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு

3. **குறிப்புகளைப் படித்துத் தை என முடியும் சொற்களை எழுதுக.**

1. நத்தை 2. கழுதை 3. ஆந்தை 4. விதை

4. **கீழ்க்காணும் தொடரைப் பல தொடர்களாக மாற்றுக.**

2. கதிரவன் வீட்டுக்குச் சென்றான்.

அ. கதிரவன் வீட்டுக்குச் சென்றானா? ஆ. கதிரவனா வீட்டுக்குச் சென்றான் ?

இ. கதிரவா வீட்டுக்குச் செல். ஈ. கதிரவா வீட்டுக்குச் செல்வாயா?

5. **புதிய சொற்களை உருவாக்குக.**

2. பல்கலைக்கழகம் - பல், கலை, கழகம், பழம், கல், பழக்கம், பக்கம், பல்கலை.

3. கவிதைத் திரட்டு - கவி, தை, திரட்டு, திட்டு, கட்டு, விதை, விட்டு, விதி, விரட்டு.

6. **பாடலைத் தொடர்ந்து பாடி மகிழ்க.**

விடுகதையாம் விடுகதை
விடை காணும் விடுகதை
உயரமாக இருப்பானாம்
ஒரே இடத்தில் நிற்பானாம்
இளநீர், தேங்காய் தருவானாம்
ஓலைக்கீற்றும் தருவானாம்
அவன் பெயர் என்ன?
தென்னைமரம் அவன் தானே.

விடுகதையாம் விடுகதை
பகலிலே துயிலுவானாம்
இரவிலே அலறுவானாம்
அவன் பெயர் என்ன?
ஆந்தை அவன் தானே.

செக்கச் சிவந்திருப்பாளாம்
வாலும் முளைத்திருக்குமாம்
சந்தைக்கு வந்திருப்பாளாம்
அவள் பெயர் என்ன?
மிளகாயாம் அவள் பெயர்.
விடுகதையாம் விடுகதை.

## பல சொற்கள் ஆனால் ஒரே பொருள்

### பயிற்சி :

**பல சொற்களைக் கொண்ட ஒரே பொருளைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. சூரியன் 2. 3. பாடல் 4. குழந்தை 5. மா

## சிறுபஞ்சமூலம் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கண்வனப்புக் <u>கண்ணோட்டம்</u> கால்வனப்புச் <u>செல்லாமை</u>
   எண்வனப்பு <u>இத்துணையாம்</u> என்றுரைத்தல் - பண்வனப்புக்
   கேட்டார்நன் றென்றல் <u>கிளர்வேந்தன்</u> தன்னாடு
   <u>வாட்டான்நன் றென்றல்</u> வனப்பு.

**ஆ) பிரித்து எழுதுக.**

1. கண் + ஓட்டம்  2. என்று + உரைத்தல்  3. நன்று + என்றல்

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சந்தோஷம்  2. இகழ்தல்

**ஈ) நிரப்புக.**

1. இரக்கம் கொள்ளுதல்
2. தன் கருத்துக்களைத் துணிந்து சொல்லுதல்
3. பிறரிடம் பொருள் வேண்டிச் செல்லாமை
4. கேட்பவர் நன்று என்று கூறுதல்
5. குடிமக்கள் அவனை நல்லவனென்று கூறுதல்.

**உ) பாடலில் இரண்டாம் எழுத்து (எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

க<u>ண்</u>வனப்பு - எ<u>ண்</u>வனப்பு - க<u>ண்</u>ணோட்டம் - ப<u>ண்</u>வனப்பு கே<u>ட்</u>டார்நன் - வா<u>ட்</u>டான்நன்
றெ<u>ன்</u>றல் - றெ<u>ன்</u>றல்

**ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. சிறுபஞ்சமூலம் பாடலின் ஆசிரியர் யார்?**

சிறுபஞ்சமூலம் பாடலின் ஆசிரியர் காரியாசான்.

**2. சிறுபஞ்சமூலம் பொருள் என்ன?**

தமிழ் மருத்துவத்தில் உடல் நோய்களைத் தீர்ப்பதற்கு கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்களைச் சேர்த்து மருந்தாக்குவது போல, ஐந்து கருத்துக்கள் மூலம், மக்கள் மனநோயைத் தீர்ப்பனவாக இப்பாடல்கள் உள்ளன. ஆகையால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

**3. தமிழ் மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஐந்து மூலிகைகள் என்று சிறுபஞ்சமூலத்தில் குறிப்பிடப்படுபவை எவை?**

கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி

**எ) சிந்தனை வினா.**

**1. எத்தகைய நல்ல பண்புகளை நாம் வளர்த்துக் கொண்டால் பிறரிடம் நற்பெயர் பெறலாம்?**

1. மனிதநேயம்
2. பிறருடைய நலத்தைப் பற்றி அறிதல்
3. பகைவனிடமும் அன்பு காட்டுதல்
4. பிறர் செய்யும் தவற்றை மன்னித்துவிட்டு அவருக்கே உதவியும் செய்தல்.
5. தம்மை விட எளியவரிடமும் பணிவுடன் இருத்தல்.
6. பிற உயிரினங்களிடத்தும் அன்பு காட்டுதல்.

## வாரி தந்த வள்ளல் ( உரைநடை உலகம் )

### மதிப்பீடு :

**ஆ) எதிர்ச்சொற்களைக் கண்டறிந்து பொருத்துக.**

1. கீழும் x மேலும்  2. வினா x விடை  3. விருப்பு x வெறுப்பு  4. வாலும் x தோலும்
5. கையும் x களவும்  6. நன்மை x தீமை

**இ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

1. பொன் + காசு  2. கொடை + திறம்  3. யானை  4. உலகம்  5. கல்

ஈ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. பாணனின் குழந்தைகள் பசியால் வாடக் காரணம் என்ன?
பாணனின் வீட்டில் தானியங்களும், மாவும் தீர்ந்துவிட்டதால் குழந்தைகள் பசியால் வாடின.

2. வல்வில் ஓரியின் சிறந்த பண்பு யாது?
தன்னை நாடி வருபவர்களின் துயரைக் கண்டு வருத்தமுற்று உடனடியாக அவர்களின் துயர் துடைப்பவர்.

3. பரிசு பெற்ற பாணன், மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
"கற்ற கல்வி அறியாமை அகற்றுதல் போல, உற்ற துயர் துடைக்கும் வள்ளலே! உங்களின் குன்றாப்புகழ் கொடைப்பண்பு ஓங்குக! வாழ்க! வாழ்க! நீவிர் வாழ்க!" என்று பாணன் மன்னனை வாழ்த்தினான்.

4. "வாரித் தந்த வள்ளல்" - இப்படக்கதை மூலம் நீவிர் அறிந்து கொண்டதை எழுதுக.
"வாரித் தந்த வள்ளல்" - இப்படக்கதை மூலம் சங்க கால வள்ளல்கள், தமிழுக்குப் புகழ் சேர்க்கும் விதமாக தமிழ் பாடும் புலவர்களையும், பாணர்களையும் பரிசுப்பொருள்கள் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ உதவி செய்துள்ளனர் என்பதை அறிந்து கொண்டேன்.

5. வல்வில் ஓரி எதனால் பாணருக்கு பரிசுகளை அள்ளி வழங்கினார் ?
பாணரின் வறுமையின் நிலையை அறிந்த வல்வில் ஓரி பரிசுகளை அள்ளி வழங்கினார்.

6. வல்வில் ஓரி பாணனுக்கு என்னென்ன பரிசுகள் வழங்கினார்?
பொற்காசுகளையும், அணி மணிகளையும், களிறுகளும், பற்பல பரிசுகளையும் பேழையில் நிறைத்து வல்வில் ஓரி பாணனுக்கு அனுப்பினார்.

உ) சிந்தனை வினா.

1. வல்வில் ஓரியைப் போல் ஈகைக்குணம் உனக்கிருந்தால் நீ யாருக்கெல்லாம் உதவி செய்வாய்?
   1. வல்வில் ஓரியைப் போல் ஈகைக்குணம் எனக்கிருந்தால் ஆதரவற்ற முதியவர்கள், பெற்றோரை இழந்த சிறுவர்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கெல்லாம் உதவி செய்வேன்.
   2. அவர்கள் சுயமாக வாழ்வதற்குத் தேவையானவற்றைச் செய்வேன்.

ஊ) உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. குப்பன் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறான்.
2. பட்டத்தின் நூல் அறுந்ததும் நிலை தடுமாறி, அந்தப்பட்டம் கீழே விழுந்து விட்டது.
3. நாம் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு இன்றி சுதந்திரமாய வாழ விரும்பினால் வாழ்வில் தடுமாறுவோம்.

எ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பதினெண்கீழ்க்கணக்கு  2. கடையெழு  3. காரியாசான்
4. குடிமக்கள் அவனை நல்லவனென்று கூறுதல்.  5. கடன் வாங்குதல்

ஏ) பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.

1. நான் அலுவலகத்துக்கு போனேன்.
2. என் ஆயா மருத்துவமனைக்குச் சென்றார்.
3. தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகை கொண்டாடினான்.
4. தீபாவளிக்கு புது துணி வாங்கினேன்.

ஒ) பாடலை நிறைவு செய்க.

நாடு அதை நீயும் நாடு
பாடு அதன் புகழ் நாடு
ஓட்டு அதன் வறுமை ஓட்டு
கூட்டு அதன் வளம் கூட்டு
விரட்டு அதன் பகை விரட்டு
திரட்டு அதன் நிதி திரட்டு

### கற்பவை கற்றபின்

1. **கல்விச்செல்வமே பிற செல்வங்களை விட நிலையானது - இக்கூற்றைப் பற்றி நீ என்ன செய்கிறாய்?**

கல்விச்செல்வமே பிற செல்வங்களை விட நிலையானது. இக்கூற்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று தான். திருவள்ளுவரும் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்று குறிப்பிடுகிறார்.

கல்விச்செல்வமானது கேடு இல்லாதது. ஒரு கட்டடம் கட்டினால் கூட, அக்கட்டடம் கட்டபட்ட தன்மையைப் பொறுத்துதான் அதன் வாழ்நாள் அறியப்படும். ஆனால் கற்ற கல்விக்கு எவ்வித அழிவுக்காலமும் இல்லை. உடலில் உயிர் இருக்கும்வரை அவருடைய கல்வியால் உலகம் அவரை அறிந்து கொள்கிறது.

ஒருவர் பெற்ற கல்வியின் பயனாய்ப் பல பொருள்களைப் பெற்றிருந்தாலும், பெரிய செல்வந்தனாக இருந்தாலும் அவையெல்லாம் வெள்ளம், நெருப்பு போன்ற இயற்கைச்சீற்றங்களால் அழிந்து போனாலும் அவர் கற்ற கல்வி மட்டும் அழியாது. எனவே, கல்விச்செல்வமே பிற செல்வங்களை விட நிலையானது.

2. **"வல்வில் ஓரி ஒரு பெரும் கொடைவள்ளல்" - இக்கூற்றுக்கு விளக்கம் தருக.**

ஓரி தன்னை நாடி வரும் பாணர்களைப் பாடுங்கள் என்று சொல்லமாட்டான். வயிறார அறுசுவை உணவளிப்பான். அவர்கள் உறங்குவதற்கு படுக்கையைக் கொடுப்பான்.

அவர்களாக இவனைப் புகழ்ந்து பாடினால் கேட்டு மகிழ்வான். தன்னைப் புகழ்ந்து பாடினாலும் பாடாவிட்டாலும் அனைவருக்கும் பரிசுப்பொருள்களை அள்ளிக் கொடுப்பான். தன் அரண்மனையில் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தங்கி ஓய்வெடுக்கலாம். அவர்களின் இன்பத்தில் இன்பம் கண்டவன். இக்காரணங்களால் வல்வில் ஓரி அன்பில் சிறந்தவன் என்பதை உணரலாம்.

### தலைமைப்பண்பு ( விரிவானம் )

#### மதிப்பீடு :

**அ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. **கார்வேந்தன் எதற்காகப் பலரை நாடிச் சென்று பொருளுதவி பெற்றார்?**

மைலாப்பூர் என்ற ஊருக்கு ஊர்த்தலைவராக இருந்தவர். அந்த ஊரின் முன்னேற்றத்திற்காகப் பலரை நாடிச்சென்று பொருளுதவி பெற்றார்.

2. **ஊர்த்தலைவர் அறிவித்த இரண்டாவது போட்டி என்ன?**

மைலாப்பூர் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த வேண்டும் என்பது இரண்டாவது போட்டியாகும்.

3. **மைலாப்பூர் மக்களுக்கு தர்மராசு மீது நம்பிக்கை ஏற்படக் காரணம் என்ன?**

   1. தர்மராசு மக்களுக்கு அறுசுவை உணவளித்தார்.
   2. தம் செல்வங்களை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.
   3. இச்செயல்களால் மைலாப்பூர் மக்களுக்கு தர்மராசு மீது நம்பிக்கை ஏற்பட்டது.

4. **சிறந்த நிருவாகி என ஊர்த்தலைவர் யாரை அறிவித்தார்?**

சிறந்த நிருவாகியாக ஊர்த்தலைவர் செல்வநாயகத்தை அறிவித்தார்.

5. **சிறந்த நிருவாகத் திறமைக்கான பண்புகள் என்னென்ன?**

   1.

ஆ) சிந்தனை வினா.

1. **உங்கள் ஊர் முன்னேற்றத்திற்காக நீங்கள் எவ்வகையில் உதவுவீர்கள் ?**
   1. ஊரை முன்னேற்றம் பெறச் செய்ய முதலில் செய்ய வேண்டியது கல்வி கற்காத மாணவர்கள் இவ்வூரில் இல்லை என்று கூறும் நிலையை ஏற்படுத்துவேன்.
   2. மழைக்காலங்களில் சாலையில் உள்ள மேடு பள்ளங்களைச் சரிசெய்வேன்.
   3. பொதுக்குழாய்களில் நீர் வரும் நேரத்தை அதிகப்படுத்துவேன். குழாய்கள் சரியாக மூடப்படாமல் இருந்தால் அவற்றை மாற்றிப் புதிய குழாய் அமைப்பேன்.
   4. மின்விளக்குகள் பகல் நேரங்களில் தெருக்களில் எரிந்தால் அதனை மின்வாரியத்திற்குத் தெரிவிப்பேன்.
   5. சிறியவர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் சத்து மிகுந்த இயற்கைஉணவு கிடைக்க வழிவகை செய்வேன்.
   6. மழைநீர் தேங்கி அதனால் கொசுக்கள் பெருகுவதைத் தவிர்க்க மழைநீர் தேங்காமல் பார்த்துக் கொள்வேன்.
   7. நோய்கள் வராமல் இருக்க சுற்றுச்சூழலைப் பாதுகாப்பேன்.

   மேற்கூறிய அனைத்தையும் செய்தால் ஊர் முன்னேற்றம் அடையும்.

2. **ஒரு சிறந்த தலைமைக்கான பண்புகள் என்னென்ன என்பதைக் கலந்துரையாடவும்.**
   1. நாட்டின் முன்னேற்றத்திற்குக் கல்வி மிக மிக அவசியம் என்பதால் கல்வி நிலையங்களை உருவாக்கிப் புதிய கல்வி முறை மூலம் பல சான்றோர்களை உருவாக்குவேன்.
   2. வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு உதவி புரிவேன்.
   3. கற்றலில் பின் தங்கிய மாணவர்களுக்கு உதவுவதற்கு படித்த இளைஞர்களை நியமித்து இலவசமாகக் கல்வியை கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்வேன்.
   4. போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவேன்.
   5. சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றை உண்டாக்கித் தருவேன்.
   6. ஏரி, குளங்களை அமைத்து நீர்நிலைகளைப் பலப்படுத்துவேன்.
   7. பொதுப்பணிகளைச் செய்வதற்கு அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் வீட்டிற்கு ஒருவரை வரவழைத்து செவ்வனே செய்வேன்.
   8. உழவுத்தொழில் புதிய உத்திகளை ஏற்படுத்துவேன்.

3. **உங்கள் வகுப்பில் மாணவத்தலைவரைத் தேர்ந்தெடுத்தால் யாரை தேர்ந்தெடுபீர்கள்? ஏன்? என்று கலந்துரையாடுக.**

   மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து மாணவத்தலைவரைத் தேர்ந்து வகுப்பறையில் கலந்துரையாட வேண்டும்.

## இணைச் சொற்கள் (கற்கண்டு)

### மதிப்பீடு :

**அ) கீழே உள்ள சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எழுதுக.**

நேரிணை : அருமை பெருமை, தாயும் சேயும், நகமும் சதையும், சீரும் சிறப்பும், கண்ணும் கருத்தும்.

எதிரிணை : காலை மாலை, அன்றும் இன்றும், உயர்வு தாழ்வு, வெற்றி தோல்வி.

செறியிணை : கன்னங்கரேல், ஒப்பாரும் மிக்காரும், செக்கச்செவேல்.

**ஆ) இணைச்சொற்களாகப் பொருத்தி மகிழ்க.**

1. தாயும் சேயும் 2. விருப்பு வெறுப்பு 3. ஏழை எளிய 4. பொய்யும் புரட்டும்
5. பள்ளம் மேடு 6. இன்பமும் துன்பமும் 7. அன்றும் இன்றும் 8. அங்கும் இங்கும்
9. உயர்வும் தாழவும் 10. விண்ணும் மண்ணும்

**இ) கோடிட்ட இடங்களை இணைச்சொற்களால் நிரப்புக.**

1. 2. கும்மி 3. தங்கு 4. விருப்பு 5. செக்க

**ஈ) கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வெற்றியும் தோல்வியும் 2. கிண்டலும் கேலியும் 3. மேடும் பள்ளமுமாய்
4. கண்ணுங்கருத்துமாக 5. இன்பமும் துன்பமும்

## கற்பவை கற்றபின்

**1) நீங்கள் படிக்கும் நூல்களிலிருந்து இணைமொழிகளைத் தொகுக்க.**

1. வாலும் தோலும் 2. கண்ணும் காதும் 3. கண்ணும் கருத்தும் 4. கையும் களவும்
5. குறுக்கும் மறுக்கும் 6. இரவும் பகலும் 7. கீழும் மேலும் 8. நன்மை தீமை
9. வினா விடை 10. விருப்பு வெறுப்பு

**3) இணைமொழிகள் வருமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

1. ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த குழந்தையைப் பார்க்க கூட்டங்கூட்டமாய் மக்கள் வந்தனர்.
2. தஞ்சை பெரிய கோவில் தலைமுறை தலைமுறையாய் நின்று தமிழரின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.
3. மழையில்லாமல் பயிர்கள் வாடி வதங்கி உள்ளன.
4. குழந்தைகள் ஓடியாடி விளையாட வேண்டும்.
5. நாளும் கிழமையும் எவருக்காகவும் காத்திருக்காது.

## மொழியை ஆள்வோம்

**2) சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. திறமை : நம் திறமையை செய்யும் தொழிலில் காட்ட வேண்டும்.
2. நம்பிக்கை : நாம் எச்செயலையும் நம்பிக்கையுடன் செய்து முடிக்க வேண்டும்.
3. அறிவு : நாம் நம் வாழ்வில் பொதுஅறிவை வளர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.
4. முன்னேற்றம் : என் நண்பன் விவசாயம் செய்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்தான்.
5. பரிவு : எல்லா உயிர்களிடத்திலும் பரிவு காட்ட வேண்டும்.

**4) பொருத்தமான சொற்களைக் கொண்டு, தொடரை முழுமையாக்குக.**

1. செல்வநாயகம் 2. கொல்லிமலை 3. இரக்கம் காட்டல் 4. ஊர்த்தலைவர் 5. பாணர்

**5) புதிய சொற்களை உருவாக்குக.**

1. பண்பாடு - பண், பாடு, படு
2. சந்திரன் - சரன், சந்தி, திரன், சதி
3. பாலைவனம் - பாலை, வனம், வலை, பானம், பாவம்
4. கட்டுரை - கட்டு, கரை, கடு
5. மதிப்பெண் - மதி, பெண், மண், திண்

**6) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மூன்று 2. நேரிணை 3. எதிரிணை 4. செறியிணை

**7) சொற்களைக் கொண்டு புதிய தொடர்களை உருவாக்குக.**

2. மழையில் நனைவது எனக்குப் பிடிக்கும்.
3. நான் தினமும் பள்ளிக்கூடம் செல்கிறேன்.
4. என்னே! ரோஜாவின் மனம்!
5. சமையலுக்குப் பயன்படுவது புளி

## மொழியோடு விளையாடு

**1) சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வல்வில் ஓரி வாரித் தரும் வள்ளல்.
2. பாணரே! உம் வறுமையைப் போக்குவது என் பொறுப்பு.
3. களிறும் கொடையாய் நல்கும் வான் புகழ் வல்லில் ஓரி.
4. மக்களுக்கு தர்மராசு மீது அளவற்ற நம்பிக்கை கொண்டது.
5. செல்வநாயகம் மூதாட்டிக்கு உணவு வாங்கிக் கொடுத்தார்.

2. **கொடுக்கப்பட்ட சொற்களையும், குறிப்புகளையும் கொண்டு புதிய சொல் உருவாக்குக.**

1. விதை 2. வேலி 3. நகம் 4. இலை 5. உடை

3. **வரிசைமாறியுள்ள தொடர்களை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.**

1. ஊர்த்தலைவர் நிருவாகி ஒருவரை நியமிக்க எண்ணினார்.
2. தர்மராசு, செல்வநாயகம் இருவரும் நிருவாகி பதவிக்கு விருப்பம் தெரிவித்தனர்.
3. மூதாட்டி ஒருவர் மரத்தடியில் அமர்ந்திருந்தார்.
4. செல்வநாயகம் நிருவாகியாகத் தகுதியானவர் என்றார் ஊர்த்தலைவர்.
5. ஊர்த்தலைவரின் முடிவை மக்கள் மகிழ்ந்து ஏற்றனர்.

4. **கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் புதிரில் உள்ள வினாக்களுக்குச் சிந்தித்து சரியான விடையைக் கண்டுபிடிக்க.**

இடமிருந்து வலம் : ஆராய்ச்சி, பரிவு வலமிருந்து இடம் : தரணி, வேந்தன், கம்பு
மேலிருந்து கீழ் : அமைச்சர், வல்வில் ஓரி கீழிலிருந்து மேல் : பசி, மெதுவாக, இசை

5. **கீழ்க்காணும் தொடர்களில் பொருத்தமான இணைச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அடுக்கடுக்காக 2. கீரியும் பாம்பும் 3. கண்ணுங்கருத்துமாக 4. இன்பமும்துன்பமும்
5. ஈடும்எடுப்புமாக

இயல் - 8 **கல்வியே தெய்வம்** ( கவிதைப்பேழை )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. உயர்ந்த 2. வளம் + அதை 3. இருட்டு

**ஆ) ஒன்று போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.**

முதலெழுத்துச் சொற்கள் :
அன்னையும் - அறிந்திட, கண்ணெனும் - கருத்தினில், நன்மையும் - நயமதும், கல்வியை - கசடற, வல்லமை - வளமதை, கற்றிட - கணக்கென, வெற்றிகள் - வெளிச்சமும், விண்ணையும் - விடியலாய்.
இரண்டாமெழுத்துச் சொற்கள் :
நன்மையும் - அன்னையும் - பொன்னையும், கல்வியை - வல்லமை, கற்றிட - வெற்றிகள், விண்ணையும் - திண்மையும்.

**இ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. தீமை 2. இருட்டு 3. இகழ் 4. மறையும் 5. தோல்வி 6. குழப்பம்

**ஈ) "உம்" என முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

1. அன்னையும் தந்தையும் 2. கண்ணெனும் கல்வியும் 3. பொன்னையும் மண்ணையும்
4. நன்மையும் மென்மையும்

**உ) எல்லா கேள்விகளுக்கும் ஒரே விடை என்னவென்று கண்டுபிடியுங்கள் :**

விடை : கல்வி.

**நீதியை நிலை நாட்டிய சிலம்பு** ( உரைநடை உலகம் )

**மதிப்பீடு :**

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. சிபி மன்னன் 2. மாணிக்கம் 3. அறம் + நெறி 4. காற்சிலம்பு 5. ஒறுத்தல்

**ஆ) கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. அவ்வூர் 2. தகுதியுடைய 3. தேர்க்கால் 4. அந்தப்பெண் 5. நிறைந்திருக்கும்.

**இ) கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. கள்வன் + அல்லன் 2. செம்மை + கோல்

ஈ) கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

1. அறியாமை : கல்வி அறியாமை இருளைப் போக்கும் சிறந்த ஆயுதமாகும்.
2. நீதி : பாண்டியமன்னர் தவற்றை உணர்ந்ததும் தன்னுயிர் நீத்து நீதியை நிலைநாட்டினார்.
3. சிலம்பு : சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் என ஆயிற்று.
4. மாணிக்கம் : கண்ணகியின் சிலம்பு மாணிக்கத்தால் ஆனது.

உ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் யாது?

கண்ணகியின் கணவனான கோவலன் பாண்டியமன்னனால் தவறான தீர்ப்பளிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதுவே கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பமாகும்.

2. புகார் நகரின் சிறப்புகள் யாவை?

ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனும், பசுவிற்கு நீதி வழங்குவதற்காக, தன் மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச்சோழனும் வாழ்ந்த சிறப்புக்குரியது புகார் நகரம்.

3. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக்குடை வீழக்காரணமென்ன?

பொற்கொல்லன் கூறியதைக் கேட்டு ஆராயாமல் கோவலனுக்குத் தண்டனை அளித்தான் பாண்டியமன்னன். ஆதலால் அவனுடைய வெண்கொற்றக்குடை வீழ்ந்தது.

4. கண்ணகியின் கணவர் பெயர் என்ன?

கண்ணகியின் கணவர் பெயர் கோவலன்.

5. கண்ணகியின் ஊர் எது?

கண்ணகியின் ஊர் பூம்புகார் ஆகும்.

6. பாண்டிய மன்னனின் சிலம்பு எவற்றால் ஆனது?

பாண்டிய மன்னனின் சிலம்பு மாணிக்கப்பரல்களால் ஆனது.

ஊ) சிந்தனை வினா.

1. "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு." - இந்தக் குறள் கருத்து யாருக்குப் பொருந்தும்? கண்ணகிக்கா? பாண்டிய மன்னருக்கா? சிந்தித்து விடை தருக.

இந்தக் குறள் பாண்டியமன்னருக்குப் பொருந்தும்.

1. பாண்டியமன்னன் பொற்கொல்லன் கூறிய பொய்யை உண்மை என நம்பி ஆராய்ந்து முடிவெடுக்கவில்லை.
2. பிறர் சொல் கேட்டுப் பிழை செய்துவிட்டான்.
3. ஆட்சிப்பொறுப்பில் மன்னன் இருதரப்பினரின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். தீர விசாரிக்காமல் தீர்ப்பளித்து விட்டான். ஆகையால் இக்குறள் பாண்டியமன்னருக்கே பொருந்தும்.

## காணாமல் போன பணப்பை (விரிவானம்)

### மதிப்பீடு :

அ) பொருள் கூறுக.

1. மன்னன் 2. வெகுமதி 3. எண்ணம் 4. முரசறைந்து அறிவித்தல்

ஆ) சேர்த்து எழுதுக.

1. பணப்பை 2. முரசறைந்து 3. கூறியிருந்தான்

இ) எதிர்ச்சொல் எழுதுக.

1. விற்று 2. குறைய 3. அவள் 4.அநீதி 5. அநியாயம்

**ஈ) வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. பணப்பையைப் பெற்றுக் கொண்ட வணிகன் என்ன கூறினான்?**

வணிகன், பணப்பையைப் பெற்றுக்கொண்டு "என் பையில் அதிகப்பணம் இருந்தது. இப்போது பணம் குறைகிறது" என்று பொய் சொன்னான்.

**2. வணிகனுக்கு சிற்றரசர்கள் எவ்வாறு பாடம் கற்பித்தார்?**

சிற்றரசர் வணிகனிடம், உன் பையில் அதிகப்பணம் இருந்தது, இல்லையா? ஆனால் இந்த மூதாட்டி கண்டெடுத்துக் கொடுத்த பையில் பணம் குறைவாக உள்ளது. இப்போது நீ தொலைந்து விட்டதாகச் சொல்லும் உன்னுடைய பணப்பை இதுவல்ல என்று தெரிகிறது. எனவே பணத்திற்குச் சொந்தக்காரன் வந்து கேட்கும் வரை என்னிடமே இருக்கட்டும். நீ இவ்விடத்தை விட்டுப்போகலாம் என ஆணையிட்டான்.

**3. பணப்பை கிடைத்து விட்டால் வணிகன் எவ்வளவு சன்மானம் வழங்குவதாகக் கூறினான்?**

பணப்பை கிடைத்து விட்டால் வணிகன் நாற்பது சன்மானம் வழங்குவதாகக் கூறினான்.

**4. இக்கதையின் மூலம் நீ அறியும் நீதி என்ன?**

இக்கதையின் மூலம் நான் அறியும் நீதி நேர்மை நன்மை தரும்.

**5. இக்கதையில் நீ விரும்பிய கதைமாந்தர் யார்? ஏன்?**

இக்கதையில் நான் விரும்பிய கதைமாந்தர் மூதாட்டி. மூதாட்டி நினைத்திருந்தால் அப்பணப்பையை அவளே எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நேர்மையாக சிற்றரசரிடம் ஒப்படைத்துள்ளார்.

**உ) சிந்தனை வினா.**

**1. நீங்கள் அரசராக இருந்தால், இந்தச் சிக்கலுக்கு என்ன முடிவெடுப்பீர்கள்?**

நான் அரசராக இருந்தால் அவர் செய்தபடியே அப்பணத்தை மூதாட்டியிடம் ஒப்படைத்து விடுவேன். மேலும், அவ்வணிகரை ஒரு மாதத்திற்கு அரண்மனையிலும், அரசாங்கநிலத்திலும் ஊதியமின்றிப் பணிசெய்ய வேண்டும் என கட்டளையிடுவேன்.

## மயங்கொலிச்சொற்கள் (கற்கண்டு)

### மதிப்பீடு :

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. ஒட்டுநர் 2. வழியாக 3. கிளி 4. வாளை 5. இளைத்து 6. அலையில்

**ஆ) விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை எழுதுக.**

1. பறவை 2. பரவை 3. கறை 4. கரை 5. ஆணி 6. ஆனி
7. மாண் 8. மான் 9. இரை 10. இறை

**இ) கீழ்க்காணும் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. கலை 2. திணை 3. எரிபொருள் 4. விலங்கு 5. மரம்
6. தினை 7. எரிபொருள்

**ஈ) சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. கல்வி : எல்லாப்புகழையும் பெற்றுத் தருவது கல்வி.
2. பணம் : பணம் பத்தும் செய்யும் என்பது பழமொழி.
3. நேர்மை : நேர்மை நன்மை தரும்.
4. இசை : இசைக்கு மயங்காத உயிர்கள் உண்டோ?

## மொழியை ஆள்வோம்

**2) பொருத்தமான சொல்லால் கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சத்தான 2. தகவல்களை 3. நிறைகுடம்

**3) பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நாம் நாவை அடக்க வேண்டும்.

2. “நுணலும் தன் வாயால் கெடும்”. 3. நுணல் என்றால் தவளை என்பது பொருள்.

## தமிழோடு விளையாடு

**அ) ஒரு சொல் - இரு பொருள்.**

1. ஆரோக்கியமான பானம் 2. காய்கறி 3. நிலா 4. கயிறு

**ஆ) முறை மாறியுள்ள திருக்குறளை முறைப்படுத்தி எழுதுக.**

1. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

2. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

3. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

4. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்.

**இ) புதிருக்கு விடையளி.**

1. 2. நெருப்பு 3. குயில்

**ஈ) சொல்லில்லிருந்து புதிய சொல் உருவாக்கலாமா?**

1. நெல் வயல் 2. விண் கல் 3. வலைமீன் 4. பலாமரம் 5. மண்பானை

இயல் - 9

## அறநெறிச்சாரம் ( கவிதைப்பேழை )

### மதிப்பீடு :

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 226 2. முனைப்பாடியார்

**ஆ) பிரித்து எழுதுக.**

1. பொழுது + ஆற்றும் 2. சொல் + இனம் 3. சொல் + ஆடல்

**இ) சேர்த்து எழுதுக.**

1. தன்னுடைய 2. பேச்சுத்தன்மை

**ஈ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. ஒற்றுமை 2. இல்லை 3. பொய்ம்மை 4. இன்பம் 5. நீ

**உ) பாடலில் இரண்டாம் எழுத்து ( எதுகை) ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

தூயவாய்ச் - ஆய வேற்றுமை - சாற்றுங்கால் - ஆற்றலும் வன்மையும் - துன்பங்கள்

**ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அறநெறிச்சாரம் பாடலின் ஆசிரியர் யார்?
அறநெறிச்சாரம் பாடலின் ஆசிரியர் முனைப்பாடியார்.

2. நாம் பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்பு யாது?
நாம் பேசும்போது குற்றம் ஏற்படாமல் பேசுவதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. அறநெறிச்சாரம் - நூல் குறிப்பு தருக.
இது அறநெறிக் கருத்துகளைக் கொண்டது. வெண்பா வடிவில் இயற்றப்பெற்ற நூல் அறநெறிச்சாரம். இப்பாடல் எளிமையான வழியில் கருத்துகளை சுருக்கமாகவும் புரியும்படியும் அழகாக விளக்குகிறது. இந்நூலை எழுதியவர் முனைப்பாடியார். நமக்கு வந்துள்ள பாடல் 107வது பாடல்.

## புதுவை வளர்த்த தமிழ் (உரைநடை உலகம்)

### மதிப்பீடு :

**அ) சேர்த்தெழுதுக.**

1. புரட்சிக்கவி 2. பாடிக்காட்டினார் 3. குழந்தைப்பாடல்கள் 4. மாற்றியமைத்து
5. இசையமுது

ஆ) பிரித்து எழுதுக.

1. சுற்றி + பார்த்தனர் 2. படைத்து + உள்ளார் 3. மூன்று + தமிழ் 4. அமுது + என்று
5. கவிதை + தொகுப்பு

இ) எதிர்ச்சொல் எழுதுக.

1. இவர் 2. எனது 3. கீழ் 4. சிலர் 5. பின்னும்

ஈ) பொருத்துக.

1. பாரதியார் - குயில் பாட்டு
2. பாரதிதாசன் - இருண்ட வீடு
3. பிரபஞ்சன் - வானம் வசப்படும்
4. தமிழ்ஒளி - சிற்பியின் கனவு
5. திருமுருகன் - பாவலர் பண்ணை

உ) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. எத்திராசலு என்கிற அரங்கசாமி 2. கனகசுப்புரத்தினம் 3. சுப்ரமணியன் 4. சிற்பியின் கனவு
5. விஜயரங்கம் 6. பாரதிதாசன் 7. வாணிதாசன்

ஊ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. **பாரதிதாசனுக்கு என்ன பட்டத்தை தந்தைப் பெரியார் கொடுத்தார்?**
பாரதிதாசனுக்கு "புரட்சிக்கவிஞர்" என்ற பட்டத்தை தந்தைப் பெரியார் கொடுத்தார்.

2. **பாரதிதாசன் - பெயர்க்காரணம் கூறுக.**
பாரதியார் மீது அன்பும், பக்தியும், பற்றும் உடையவர். அதனால் தான் தன் பெயரைப் "பாரதிதாசன்" என்று மாற்றியமைத்துக் கொண்டார்.

3. **புதுவையில் பிறந்த தமிழ்ச் சான்றோர் யாவர்?**
வாணிதாசன், புதுவை சிவம், தமிழ்ஒளி, பிரபஞ்சன் போன்றோர் புதுவையில் பிறந்த தமிழ்ச் சான்றோர் ஆவர்.

4. **இரா.திருமுருகன் எழுதிய நூல்களில் ஏதேனும் இரண்டைக் கூறுக.**
பாவலர் பண்ணை, என் தமிழ் இயக்கம்.

5. **தமிழ்ஒளி படைத்த சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய இசை நாடகம் என்ன?**
"விதியோ வீணையோ".

6. **"பாவேந்தர்" விருதைப் பெற்றவர்கள் யாவர்?**
வாணிதாசன், புதுவை சிவம்.

7. **பாரதியார் படைத்த முப்பெருங் காவியங்கள் யாவை?**
பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு.

8. **பிரபஞ்சனுக்கு சிறப்பைச் சேர்த்த நூல் எது?**
பிரபஞ்சனுக்கு சிறப்பைச் சேர்த்த நூல் தமிழுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற "வானம் வசப்படும்" என்ற நூலாகும்.

எ) சிந்தனை வினா.

1. **தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?**

தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும் மிகுந்த பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமது சுதேசமித்திரன் நாளிதழில் எழுதினார். இதன் மூலம் தமிழை மீட்சி பெறச் செய்தார்.

பாரதிதாசன் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாடினார். தமிழைத் தன் உயிர் என்று பாடினார். இசையமுது, குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு போன்ற பல நூல்களை எழுதி தமிழை வளர்த்தார்.

தமிழில் பெரும்புலமை பெற்ற செய்குத்தம்பி பாவலர் பல அரிய தமிழ் நூல்களை எழுதி தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார். சீறாப்புராணத்திற்கு உரை எழுதியுள்ளார்.

அழ.வள்ளியப்பா "குழந்தைக்கவிஞர்" என்ற பாராட்டுக்குரியவர். சென்னை சக்தி பத்திரிக்கை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தபோது தம் தமிழ்ப்பணியைத் தொடங்கினார். பிறகு வங்கிப்பணிக்குச் சென்றார்.

வங்கிப்பணியில் இருந்தாலும் அவருடைய தமிழ்ப்பணியை விடாமல் பல நூல்களை இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றினார்.

இவ்வாறு எத்தனையோ கவிஞர்கள் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர். பிறநாட்டு அறிஞர்களும் தமிழை வளர்த்துள்ளனர்.

## **நன்மையே நலம் தரும்** ( விரிவானம் )

**மதிப்பீடு :**

**அ) முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் எழுதுக.**

1. மற்ற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவேன் 2. வில்லவன் கோதை ஊஞ்சல் கட்டி ஆடினான்.
3. இனி யாரையும் நாங்கள் துன்புறுத்த மாட்டோம்.

**ஆ) கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.**

1. **பறவைக்கூட்டின் மீது கல்லெறிந்தவன் யார்?**
   பறவைக்கூட்டின் மீது கல்லெறிந்தவன் பீட்டர்.
2. **வில்லவன்கோதை வீட்டில் என்ன விழா நடைபெற்றது?**
   வில்லவன்கோதை வீட்டில் அவனுடைய பிறந்தநாள்விழா நடைபெற்றது.
3. **பறவைக்குஞ்சுகளை எடுக்க நினைத்த வில்லவன்கோதைக்குத் தாய் கூறிய அறிவுரை யாது?**
   பறவைக்குஞ்சுகளை எடுக்க நினைத்த வில்லவன்கோதைக்கு, அவனுடைய தாய் "நீ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. தாயிடமிருந்து பிரித்துவிட்டால், அவை மிகுந்த துன்பமடையும்" என்று அறிவுரை கூறினாள்.
4. **பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது குறித்து வில்லவன்கோதையின் தந்தை என்ன கூறினார்?**
   வில்லவன்கோதையின் தந்தை கூறியது :
   "நம்மைப் போலத்தான் இவ்வுலகில் எல்லாஉயிர்களும் வாழ்கின்றன. அவற்றிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். மற்ற உயிர்களுக்குச் செய்யும் தீங்கு, நமக்கு நேர்ந்தது போன்று உணர வேண்டும். நமக்கு வலித்தால் அவற்றிக்கும் வலிக்கும் அல்லவா" என்று வில்லவன்கோதையின் தந்தை உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது குறித்துக் கூறினார்.

## **மரபுத்தொடர்கள்** ( கற்கண்டு )

**மதிப்பீடு :**

**அ) சரியானவற்றைக் கண்டறிந்து கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அமளிதுமளி 2. அலைக்கழித்தான் 3. உப்புசப்பு 4. எதிர்நீச்சல் 5. கரைபுரண்டு
6. சரமாரியாக 7. நிறைகுடம் 8. பூசிமெழுகி 9. முழுமூச்சாக 10. வெளுத்து வாங்கி

**ஆ) பொருத்துக. ( பொருளுக்கு சரியான மரபுத்தொடரைப் பொருத்துக )**

1. அதிகமாகப் பேசுதல் - வாய்நீளம் 2. அவசரப்பட்டு பேசுபவன் - முந்திரிக்கொட்டை
3. பொய்யாக நடித்து அழுதல் - முதலைக்கண்ணீர்
4. அவமானப்பட்டான் - தலைக்குனிவு 5. முடிந்துவிட்டது - மலைஏறி விட்டது.

**இ) மரபுத்தொடரைப் பொருளுடன் பொருத்துக.**

1. ஓட்டைவாயன் - ரகசியம் காப்பாற்றாதவன் 2. கம்பி நீட்டுதல் - தப்பித்துச் செல்லுதல்
3. கண்மூடித்தனம் - அறியாமல் இருத்தல் 4. குரங்குப்பிடி - பிடிவாதமாக இருத்தல்
5. சிட்டாய்ப் பறத்தல் - மிக வேகமாகச் செல்லுதல்

ஈ) **வாக்கியத்தில் அமைக்க.**

1. வாய்க்கொழுப்பு - எல்லோரிடத்திலும் வாய்க்கொழுப்பாக பேசக்கூடாது.
2. புத்தகப்புழு - மாணவர்கள் வெறும் புத்தகப்புழுவாக இல்லாமல் வெளி உலக அறிவோடு இருத்தல் அவசியம்.
3. நாளும் கிழமையும் - நாளும் கிழமையும் பார்க்காமல் உழைத்தால் மட்டுமே நாம் வாழ்வில் வெற்றி பெறலாம்.
4. பகல் கனவு - நடக்காத ஒன்றைப் பற்றி பகல் கனவு காணக் கூடாது.
5. ஒரு கை பாக்குறேன் - ராஜா அனைத்து தேர்வுகளிலும் வெற்றி பெற்றதால் ஒரு கை பாத்துவிட்டேன் என்று கூறினான்.

உ) **கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.**

**1. மரபுத்தொடர் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.**

ஒரு சொல் அல்லது தொடர் அதனுடைய நேர்பொருளை உணர்த்தாமல் அதனோடு ஒப்புமையுடைய மற்றும் பயன்பாட்டில் வழிவழியாக வேறு குறிப்புப் பொருளினைத் தந்து நிற்கும் போது அவற்றை மரபுத்தொடர் என்கிறோம்.

(எ.கா.) அரக்கப்பறக்க, கை கழுவுதல், கயிறு திரித்தல்.

### கற்பவை கற்றபின்

1) **மரபுத்தொடர்களின் பொருளை அறிந்துகொள்ள முயல்க.**

| மரபுத்தொடர் | பொருள் |
|---|---|
| 1. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது | பட்டறிவில்லாத படிப்பறிவு |
| 2. முதலைக்கண்ணீர் | பொய்யழுகை |
| 3. கானல் நீர் | இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது. |
| 4. குட்டிச்சுவர் | பயனின்றி இருத்தல். |
| 5. கொட்டியளத்தல் | மிகுதியாகப் பேசுதல். |
| 6. வாழையடி வாழை | தலைமுறை தலைமுறையாக |
| 7. ஆயிரங்காலத்துப் பயிர் | நீண்ட காலத்திற்கு உரியது. |

2) **அன்றாட வாழ்வில் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பேச்சில் காணப்படும் மரபுத்தொடர்களைத் தொகுத்து வருக.**

| மரபுத்தொடர்கள் | |
|---|---|
| 1. அள்ளிக்குவித்தல் | 6. ஈவிரக்கம் |
| 2. அண்டப்புலுகன் | 7. உதவாக்கரை |
| 3. அரக்கப்பறக்க | 8. ஆழம் பார்த்தல் |
| 4. ஆகாயக்கோட்டை | 9. எதிர்நீச்சல் |
| 5. அகலக்கால் வைத்தல் | 10. கட்டுக்கோப்பு |

3) **மரபுத்தொடர்களைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.**

1. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்று சொன்ன காலம் மலையேறிவிட்டது.
2. திருமணம் நிகழ்வதைப் பெரியோர் ஆயிரங்காலத்துப் பயிராகக் கருதுவர்.
3. அரசியல்வாதிகளின் வாக்குறுதி ஆகாயத்தாமரை போல் உள்ளது.
4. ராஜாராம் எடுத்ததெற்கெல்லாம் முதலைக்கண்ணீர் வடிப்பான்.
5. மழை எங்கள் ஊரில் தொடர்ந்து வெளுத்து வாங்கி கொண்டிருக்கிறது.

## மொழியை ஆள்வோம்

**2) சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. அன்பு - பிற உயிர்களிடத்தில் நாம் அன்பு காட்ட வேண்டும்.
2. அம்மா - என்னிடத்தில் அம்மா மிகவும் பிரியமாக இருப்பார்கள்.
3. ஆசை - எனக்கு விண்வெளியில் செல்ல மிகவும் ஆசை.
4. இன்பம் - இன்பம் துன்பம் கலந்ததே நம் இல்லற வாழ்க்கை.
5. ஈகை - நாம் அனைவரும் ஈகைத்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
6. உடல் - ஐம்புலன்களில் ஒன்று நமது உடல்.
7. ஊஞ்சல் - வில்லவன்கோதையின் தோட்டத்திலுள்ள மரத்தில் அவனது நண்பர்கள் ஊஞ்சல் கட்டி விளையாடினார்கள்.

**4) பிறமொழிகளை கலவாமல் எழுதுக.**

நானும் என் தம்பியும் பள்ளிக்குச் சென்றோம். வகுப்பில் எல்லா பாடங்களையும் நன்றாகப் படித்தோம். தேர்வில் நல்ல மார்க் எடுத்தோம்.

**5) கோடிட்ட இடங்களை பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. பசுமையான 2. கனத்த 3. மயிலைக் 4. தோகை 5. போர்வை

**6) குறிப்புகளைக் கொண்டு விடை எழுதுக.**

1. மழை 2. நத்தை 3. ஊசி 4. கடிகாரம்

**7) பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

1. விளம்பரம் 2. கபடி 3. 2 மணி 4. திடல்

5. கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.

## மொழியோடு விளையாடு

**1) குறுக்கெழுத்துப்புதிர்**

இடமிருந்து வலம் : 1. விளம்பரம் 2. புறா 3. கனவு

கீழிலிருந்து மேல் : 1. நூல்

வலமிருந்து இடம் : 1. விருது 2. மொழி 3. விடுதலை

குறுக்கும் நெடுக்கமாக : 1. நாடகம்

**2) குறிப்புகள் கொண்டு விடை எழுதுக.**

1. தூக்கணாங்குருவி 2. கழுகு 3. சிட்டுக்குருவி 4. கொக்கு 5. குயில்

**3) சொல்லிருந்து புதிய சொல் உருவாக்குக.**

1. பாரதியார் - பா, ரதி, யார், பார், பாதி
2. மணிக்கொடி - மணி, கொடி, மடி
3. பாவேந்தர் - பா, வேந்தர், வேர், பார்
4. நாடகம் - நா, நாம், நாகம், கடம்
5. விடுதலை - விடு, தலை, விலை, தடு

**4) சொற்களைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.**

1. பெருமை : நாம் பிறர் பெருமைப்படும் செயல்களைச் செய்ய வேண்டும்.
2. பாடல் : திருவிழாக்கள் என்றாலே மக்கள் ஆடல் பாடல் என்று மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.
3. நாடகம் : தொலைக்காட்சிகளில் வரும் நாடகங்களைப் பார்த்து நாம் நேரத்தை வீணாக்கக்கூடாது.
4. தோட்டம் : கந்தன் அவன் வீட்டில் மாடித்தோட்டம் அமைத்துள்ளான்.
5. பரிசு : கோகிலா பேச்சுப்போட்டியில் முதற்பரிசு பெற்றாள்.

**5) முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடராக்குக.**

2. புறா அழகான பறவை.
3. தமிழ் மேல் ஆர்வம் உண்டாகிறது.
4. உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர்.